




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 211 14.03.2026 சனிக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 211 | Saturday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

சனிக்கிழமை
(14–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–30
பிறை: தேய்பிறை
திதி
தசமி காலை 722 வரை
பிறகு ஏகாதசி
நட்சத்திரம்:
உத்திராடம் பின்னிரவு 3.39
வரை பிறகு திருவோணம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.
சூலம் –கிழக்கு
நல்ல நேரம் :
காலை 7–8 மணி
மாலை 5–6 மணி

மேஷம் ............ உற்சாகம்
ரிஷபம் .................. போட்டி
மிதுனம் ................ சாந்தம்
கடகம் ...................... ஓய்வு
சிம்மம் ............... ஆதாயம்
கன்னி ....................... நட்பு
துலாம் .............. உண்மை
விருச்சிகம் ............ செலவு
தனுசு .................... கடமை
மகரம் ................ பெருமை
கும்பம் ...................... பரிசு
மீனம் ................... இன்பம்

# “உலகின் பாதையை இந்தியா தீர்மானிக்கும்”

## பிரதமர் மோடி உறுதி



**புதுடெல்லி, மார்ச் 14:**

தனியார் தொலைக்காட்சி சார்பில் நெக்ஸ்ட் என்ற பெயரில் டெல்லியில் நேற்று 3 நாள் மாநாடு தொடங்கியது. இதில் 40 நாடுகளை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்று உள்ளனர். இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

உலக விநியோக சங்கிலி மீண்டும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நேரத்தில் ஐ.நா. சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் பங்கு கேள்விக்குறியாகி உள்ளது. இந்த இக்கட்டான சூழலிலும் இந்தியா தொடர்ந்து முன்னேறி செல்கிறது. உலகின் வளர்ச்சிக்கு நாங்கள் அளப்பரிய பங்களிப்பை வழங்கி வருகிறோம். இதன் காரணமாக உலகம் முழுவதும் இந்தியா குறித்த எதிர்பார்ப்பு மேலோங்கி வருகிறது.

பின்லாந்து பிரதமர் அலெக்சாண்டர் அண்மையில் டெல்லிக்கு வருகை தந்தார். அவர் கூறும்போது, “உலகம் செல்ல வேண்டிய பாதையை தற்போது குளோபல் சவுத் கூட்டமைப்பு தீர்மானிக்கிறது" என்று தெரிவித்தார். குளோபல் சவுத் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பு நாடாக இந்தியா விளங்குகிறது. இதன்படி உலகின் பாதையை தீர்மானிப்பதில் நாங்கள் முக்கிய பங்கு வகிப்போம். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

> **உலக விநியோக சங்கிலி மீண்டும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நேரத்தில் ஐ.நா. சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் பங்கு கேள்விக்குறியாகி உள்ளது. இந்த இக்கட்டான சூழலிலும் இந்தியா தொடர்ந்து முன்னேறி செல்கிறது.”**

# ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்

**ரஷியா, மார்ச் 14:**

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திடவும், ஜல் ஜீவன் மிஷன் திட்டங்களின் நிறைவேற்றத்தை உறுதி செய்திடவும் ஏதுவாக, ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்கவும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்-3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டுமென்றும் கோரி இந்தியப் பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீர் வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், கிராமப் பகுதிகளிலுள்ள 1.25 கோடி வீடுகளில், 1.12 கோடி வீடுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் குழாய்கள் மூலம் இணைப்புகளை வழங்கி, ஜல் ஜீவன் திட்டத்தில் தமிழ்நாடு பெருத்த முன்னேற்றத்தைச் சாதித்துள்ளதாகவும், இதற்கிடையில் இந்த இயக்கத்தினை மேலும் விரிவாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவினை வரவேற்கிறேன்.

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட உறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத்திட்டத்தில் முன்னெடுப்புப் பணிகளை தொடங்கியதாகவும், ஆனால் ஒன்றிய குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புத் துறை, இத்திட்டத்தினை நீட்டிக்க அனுமதி பெறும் வரை, ஒன்றிய அரசின் உதவியை தற்போது வழங்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ளதாகவும், இந்த முக்கியமான திட்டத்திற்கு இந்தக் கட்டத்தில் ஒன்றிய அரசு தனது ஆதரவிலிருந்து பின்வாங்குவது என்பது, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்குவதை பாதிக்கும்.



ஒன்றிய அரசின் சமீபத்திய ஜல் ஜீவன் திட்டத்தினை விரிவாக்கம் செய்யும் முடிவினைக் கருத்தில் கொண்டு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்-3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ள அவர், அப்போதுதான் தமிழ்நாடு அரசு ஜப்பான் பன்னாட்டு முகமையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை தொடர இயலும்.

அதோடு, கூடுதலாக 10 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை சுமார் 7,590 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திட திட்டமிட்டுள்ளது. இதில் திண்டுக்கல், நாமக்கல், திருச்சி, கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, தென்காசி, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் உள்ளடக்கியுள்ளதாகவும், இந்தப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஜல் ஜீவன் 2.0 திட்டத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட ஏதுவாக, ஒன்றிய அரசு தனது ஆதரவை தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ள முதலமைச்சர், இவ்விஷயத்தில் இந்தியப் பிரதமர் அவர்களின் ஆதரவினையும், விரைவான தலையீட்டினையும் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வணிக சமையல் எரிவாயு உருளை தட்டுப்பாடு: உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலை உயர்வு

**சென்னை, மார்ச் 14:**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்க கூட்டுப்படைகள் போர் தொடுத்து வருகின்றன. இதனால், நாடு முழுவதும் சமையல் எரிவாயு உருளைகள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு உருளைகள் விநியோகம் முற்றுலும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், சமையல் எரிவாயு உருளையைக் கையிருப்பு வைத்திருக்கும் பெரிய அளவிலான சில உணவகங்களே வழக்கம்போல அனைத்து வகை உணவுகளையும் தயாரித்து வழங்கி வருகின்றன. ஆனால், பல நடுத்தர உணவகங்கள் வழக்கமாக தயாரிக்கும் உணவு வகைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளன.ரூ.2,043 உள்ள வணிகஉருளை கள்ளச்சந்தையில் ரூ.3,000: பொதுவாக 19 கிலோ எடை கொண்ட வணிக சமையல் எரிவாயு உருளை ரூ.2,043-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது கள்ளச்சந்தையில் தட்டுப்பாட்டை காரணம் காட்டி, பலர் ரூ.3,000 வரை விற்பனை செய்கின்றனர். வேறு வழியில்லாமல் பல உணவக நிர்வாகத்தினர் இந்த எரிவாயு உருளைகளை வாங்கி தொழிலை நடத்துகின்றனர்.




உணவுகளின் விலை உயர்வு: இதனால், உணவு வகைகளின் விலையை உணவக நிர்வாகங்கள் உயர்த்தியுள்ளன.

குறிப்பாக, இட்லி, தோசை, பூரி, ஆப்பம், சப்பாத்தி, கலவை சாதம் (வெரைட்டி ரைஸ்), பொங்கல், வடை, பஜ்ஜி, போண்டா உள்ளிட்ட உணவுப் பொருள்கள் விலை ரூ.2 முதல் ரூ.5 வரை உயர்த்தப்பட்டுள்ளன.

சாப்பாடு, பிரியாணி, பிரைட் ரைஸ், சிக்கன், மட்டன் மற்றும் அசைவ உணவு வகைகள் ரூ.10 முதல் ரூ.20 வரை உயர்த்தப்பட்டுள்ளன. இந்த விலை உயர்வு தொடர்பான அறிவிப்புகள் பல கடைகளின் முன்புறத்தில் அறிவிப்பாக வைக்கப்பட்டுள்ளன.

# ரூ.64 ஆயிரம் கோடிக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்த ரஷியா




**ரஷியா, மார்ச் 14:**

உக்ரைன் மீது போர் தொடுத்ததால், ரஷியாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. இதனால் அந்த நாட்டின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி பெருமளவில் பாதிக்கப்பட்டது.

இதை பயன்படுத்தி ரஷியாவில் இருந்து மானிய விலையில் இந்தியா இறக்குமதி செய்து வந்தது. ஆனால் அதற்கும் அமெரிக்கா தடை போட்டது.

இதனால் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட ரஷியாவுக்கு, ஈரான் போர் மிகப்பெரும் வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

பாரசீக வளைகுடாவில் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடிவிட்டதால், கச்சா எண்ணெய் போக்குவரத்து தடைபட்டது. இதனால் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இந்த சூழலை பயன்படுத்தி சர்வதேச நாடுகளுக்கு ரஷியா கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்து வருகிறது. அந்த நாட்டிடம் இருந்து பல நாடுகள் எண்ணெய் வாங்கி வருகின்றன. இதனால் ரஷியா பெருமளவில் சம்பாதித்து வருகிறது. அந்தவகையில் போர் தொடங்கியது முதல் இதுவரை 7 பில்லியன் டாலர் (சுமார் ரூ.64 ஆயிரம் கோடி) அளவுக்கு ரஷியா கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்துள்ளதாக ஜெர்மனியை சேர்ந்த அர்ஜ்வால்டு அமைப்பு கூறியுள்ளது. இது கடந்த மாதத்தை ஒப்பிடுகையில் 14 சதவீதம் அதிகம் ஆகும்.

# கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 96 டாலருக்கு வர்த்தகம்

**புது டில்லி, மார்ச் 14:**

மத்திய கிழக்கு போர் காரணமாக, சாவதேச சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகம் மார்ச் மாதத்தில் மட்டும் நாளொன்றுக்கு 80 லட்சம் பீப்பாய் வரை குறையும் என சாவதேச எரிசக்தி முகமை (ஐஇஏ) எச்சரித்துள்ளது.

இது உலக வரலாற்றிலேயே கச்சா எண்ணெய் சந்தையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பாதிப்பு என்று தனது மாதாந்திர அறிக்கையில் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த பிப். 28 வான்வழித் தாக்குதலைத் தொடங்கியதிலிருந்து சாவதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடும் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வருகிறது.

உலகின் மிக முக்கியக் கடல்வழிப் பாதையான ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. மாற்றுப் பாதைகள் இல்லாத சூழலில், இராக், கத்தார், குவைத், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா போன்ற நாடுகள் தங்களின் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கவோ அல்லது முழுமையாக நிறுத்தவோ வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன.




இதன் எதிரொலியாக கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 120 டாலா வரை உயாந்த நிலையில், வியாழக்கிழமை சுமாா 96 டாலருக்கு வாத்தகமாகி வருகிறது. போரின் தீவிரத்தால் உலகளாவிய நுகாவு வளாச்சி மதிப்பீட்டையும் சுமாா 25 சதவீதம் வரை ஐஇஏ குறைத்துள்ளது.

இந்த நெருக்கடியைச் சமாளிக்கும் விதமாக, சாவதேச எரிசக்தி முகமையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்றிணைந்து, தங்களின் அவசர கால இருப்பிலிருந்து 40 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை சந்தையில் விடுவிக்க ஒருமனதாக ஒப்புக்கொண்டுள்ளன. கடந்த புதன்கிழமை எடுக்கப்பட்ட இந்த முடிவின் மூலம், தட்டுப்பாட்டைப் போக்கி சந்தையை ஓரளவுக்குச் சீராக்க முடியும் என்று ஐஇஏ நம்புகிறது.

‘உள்நாட்டு சேமிப்பு கிடங்குகள் நிரம்பி வருவதாலும், கப்பல்கள் சரக்குகளை ஏற்றிச் செல்ல முன்வராததாலும் மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் உற்பத்தி முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது உலக நாடுகளின் பொருளாதார வளாச்சியைப் பெருமளவில் பாதிக்கும். குறிப்பாக, எரிசக்தி தேவையில் வளாந்து வரும் நாடுகளுக்கு இது பெரும் சவாலாக அமையும்’ என்று ஐஇஏ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# அதிமுகவில் இணைந்தார் காளியம்மாள்!



**சென்னை, மார்ச் 14:**

நாம் தமிழர் கட்சியில் இருந்து கடந்தாண்டு விலகிய காளியம்மால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் வெள்ளிக்கிழமை இணைந்தார்.

நாம் தமிழர் கட்சியின் பெண்கள் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளராக இருந்த காளியம்மாள், கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமானுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து கடந்தாண்டு விலகுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில், சென்னையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை இன்று காலை நேரில் சந்தித்த காளியம்மாள், அதிமுகவில் இணைந்தார்.




# வணிக சிலிண்டர் தட்டுப்பாடு: திருப்பூரில் மூடப்படும் பிரியாணி கடைகள்



**திருப்பூர், மார்ச் 14:**

பின்னலாடை நகரமான திருப்பூரில் கடந்த சில நாட்களாக வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதன் எதிரொலியாக மாவட்டத்தில் உள்ள ஏராளமான பிரியாணி கடைகள் மற்றும் சிறிய உணவகங்கள் போதிய சிலிண்டர் விநியோகம் இல்லாததால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. சாதாரணமாக ரூ.1700 முதல் 2,000 வரையில் விற்பனை செய்யப்படும் வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு காரணமாக தற்போது ரூ.3,500 முதல் 4,000 வரை விற்பனை செய்கின்றனர். அதிக விலை கொடுத்து வாங்க முடியாத சிறு வியாபாரிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

இதனால் கடந்த 2 நாட்களாக மங்களம் சாலை, டவுன் ஹால், பெரிய கடை வீதி உள்ளிட்ட பகுதிகளில் சில பிரியாணி கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. தற்போது விற்பனை செய்யும் விலைக்கு ஏற்ப சிலிண்டர் வாங்கி சமைத்து விற்பனை செய்யும்பட்சத்தில் நஷ்டமே ஏற்படும் என கடைகளை பூட்டியுள்ளனர். இதனால் தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சிலர் விறகு அடுப்பு மூலம் சமைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள தொடங்கி உள்ளனர்.

# உடன்குடியில் புதிய அனல்மின் நிலையம் முதலமைச்சர் மின்உற்பத்தியை தொடங்கி வைத்தார்

**சென்னை, மார்ச் 14:**

தமிழ்நாட்டில் அனல் மின் நிலையங்கள், எரிவாயு மின் நிலையங்கள் மற்றும் மரபுசார எரிசக்தி ஆற்றல் மூலங்களான காற்றாலை மின் உற்பத்தி, சூரிய ஒளி மின் உற்பத்தி ஆகியவற்றின் வாயிலாக மின் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு எரிசக்தித் துறையில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

அண்மையில் வடசென்னை அனல் மின் நிலையம் III-ல் மின் உற்பத்தி அதன் முழு கொள்ளளவான 800 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டு வணிக பயன்பாட்டிற்க்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் ரூ.13,077 கோடி செலவில் பாரத மிகுமின் நிறுவனம் வாயிலாக நிறுவப்பட்டுள்ள 2X660 மெகாவாட் மிக உய்ய அனல் மின் நிலையத்தின் அலகு 1-ன் பணிகள் முடிக்கப்பட்டு, பல்வேறு கட்ட




சோதனை ஓட்டங்களுக்கு பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொலி காட்சி வாயிலாக மின் உற்பத்தியை தொடங்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வந்தார்.

மிக உய்ய நிலை வெப்ப தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவப்படும் அனல் மின்நிலைய திட்டங்கள் பிற அனல் மின் திட்டங்களை ஒப்பிடும்போது, 5 முதல் 6 சதவீதம் வரை அதிக திறன் மிக்கது ஆகும். எனவே, இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு எரிபொருள் செலவு குறைவதுடன் மின் உற்பத்தியினை தொடங்குவதற்கு குறைவான நேரமே தேவைப்படும்.இந்த அனல் மின் நிலையத்திற்கு தேவையான நிலக்கரி தமிழ்நாட்டின் தனித்துவமான கடலோர துறைமுகத்துடன் அமைக்கப்பட்ட முதல் திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. கடலோரத்தில் பிரத்யேகமாக 9 கிலோ மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்ட துறைமுகத்தின் நிலக்கரி இறங்குதளங்கள் மூலம் இரண்டு முழுவதும் மூடிய அமைப்புள்ள கன்வேயர் பெல்ட் வாயிலாக மணிக்கு தலா 2000 டன் நிலக்கரியை நேரடியாக மின் நிலையத்திற்கு கொண்டு செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் நிலக்கரி போக்குவரத்து செலவு குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய எரிபொருள் விநியோகம் சீராக நடைபெற உதவுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய நிலக்கரி நுகர்வு 0.50 முதல் 0.55 கிலோ கிராம் அளவு மட்டுமே தேவைப்படுவதால், கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வு 25 முதல் 30 சதவீதம் வரை குறைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டமாகவும் உள்ளது.


இம்மின் நிலையத்திற்கு தேவையான குளிரூட்டும் கோபுரம், பாய்லர், பணியாளர் குடியிருப்புகள் உள்ளிட்ட அனைத்து தண்ணீர் தேவைகளுக்கும் அனல் மின்நிலைய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள நாள் ஒன்றுக்கு 13 மில்லியன் லிட்டர் கொள்ளவுள்ள கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் வாயிலாகவே பெறப்படுவதால் நிலத்தடி நீர் மற்றும் தாமிரபரணி நீர் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இந்த மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, 400 கிலோ வோல்ட் வளிம காப்பு துணைமின் நிலையம் வாயிலாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு மின் பகிர்மானம் செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரித்து, மாநிலத்தின் மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்ய துணைபுரிவதுடன், வெளி சந்தையில் மின் கொள்முதல் செய்வது குறைக்கப்படும்.

உடன்குடி மின் திட்ட வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக 1½ லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடங்கப்பட்டு இதுவரை 52 ஆயிரம் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வந்ததன் மூலம், தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், மின்சார தேவைக்கும் முக்கிய பங்களிப்பை அளிக்கும்.

# சென்னையில் பா.ஜ.க. கேட்கும் 5 தொகுதிகள்- அ.தி.மு.க. அதிர்ச்சி



**சென்னை, மார்ச் 14:**

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் அதிகாரப்பூர்வமாக நடைபெறவில்லை.

ஆனால் பா.ஜ.க. போட்டியிட விரும்பும் தொகுதிகள் பட்டியலை அ.தி.மு.க. மேலிடத்திடம் கொடுத்துள்ளனர். அதன் அடிப்படையில் இரு கட்சிகளை சேர்ந்த தலைவர்களும் பேசி வருவதாக கூறப்படுகிறது.

சென்னையில் வேளச்சேரி, மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, தி.நகர், விருகம்பாக்கம் ஆகிய 5 தொகுதிகளையும் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த தொகுதிகளை பா.ஜ.க. கேட்பது அ.தி.மு.க. தரப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. காரணம், கடந்த தேர்தலில் வேளச்சேரியில் அ.தி.மு.க. 4 ஆயிரத்து 352 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை நழுவ விட்டது.

அதேபோல் மயிலாப்பூர் தொகுதியில் கடந்த தேர்தலில் அ.தி.மு.க. 55 ஆயிரத்து 759 வாக்குகள் பெற்று இருந்தது. ஆயிரம் விளக்கில் பா.ஜ.க. போட்டியிட்டது.

தியாகராய நகர் தொகுதியை பொறுத்தவரை வெறும் 137 வாக்குகள் வித்தியாசத்தில் தான் அ.தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பு பறிபோனது. விருகம்பாக்கம் தொகுதியிலும் அ.தி.மு.க. தோல் வியை தழுவியிருந்தாலும் 55 ஆயிரத்து 526 வாக்குகள் பெற்று இருந்தது.

எனவே மேற்கண்ட 5 தொகுதிகளிலும் கூடுதல் கவனம் செலுத்தி கைப்பற்றுவதில் அ.தி.மு.க. தீவிரம் காட்டி வருகிறது.

இந்த தொகுதிகளில் குறிப்பிட்ட சிலரை அடையாளப் படுத்தி தேர்தல் வேலைகளையும் தொடங்கி விட்டனர். தங்களுக்கு சாதகமான தொகுதிகளை பா.ஜ.க. கேட்டு வலியுறுத்துவது அ.தி.மு.க. தலைமைக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் பா.ஜ.க.வும் இந்த தொகுதிகளை குறி வைத்து தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டனர். ஆனால் அ.தி.மு.க. தரப்பில் இந்த தொகுதிகளை விட்டு கொடுக்க தயங்குவதாக கூறப்படுகிறது.

யாருக்கு எந்த தொகுதி என்பது முடிவாகும் வரை இந்த குழப்பம் இருக்கத்தான் செய்யும் என்கிறார்கள் இரு கட்சியினரும்.

# நெல்லை கால்நடை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டம்




**நெல்லை, மார்ச் 14:**

தமிழகத்தில் அரசு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமானது சென்னை, நாமக்கல், நெல்லை, ஒரத்தநாடு, சேலம், உடுமலைப்பேட்டை உள்பட 7 இடங்களில் செயல்பட்டு வருகிறது.

இந்த கால்நடைக்கல்லூரிகளில் மட்டும் ஆண்டுக்கு சுமார் 680 பேர் வரை படிப்பை முடித்துவிட்டு வெளியே வருகின்றனர். ஒவ்வொரு கல்லூரியிலும் ஓராண்டுக்கு 100 பேர் வீதம் மொத்தம் 500 பேர் வரை படித்து வருகின்றனர்.

இவர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது சற்று குறைவாகவே இருந்து வரும் நிலையில், கடந்த ஓராண்டுக்கு முன்பு அரசு புதிதாக 3 தனியார் கால்நடை கல்லூரிகளை தொடங்க அனுமதி அளிக்க பரிசீலனை செய்தது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில், மருத்துவ கவுன்சிலும் தனியார் கல்லூரிகள் தொடங்க வேண்டாம் என்று பரிந்துரை செய்தது.

ஆனாலும் அரசு அதனை ஏற்காமல் இந்த திட்டமானது அரசின் கொள்கை முடிவு என கூறி, புதிதாக தனியார் கால்நடை மருத்துவகல்லூரிகள் தொடங்க அனுமதி அளித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனை அறிந்த மாணவ-மாணவிகள் இன்று ஒருநாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் உள்ள 7 கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளை தொடங்குவதை கண்டித்து இந்த போராட்டம் நடைபெறும் நிலையில், நெல்லையில் சங்கரன்கோவில் சாலையில் ராமையன்பட்டியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக்கல்லூரியில் மாணவ-மாணவிகள் நூற்றுக்கணக்கானோர் இன்று காலை முதல் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். இதுதொடர்பாக மாணவர்கள் கூறுகையில், கடந்த 10 ஆண்டுகளாக அரசு புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்படாத நிலையில், ஆண்டுக்கு 680 பேர் வரை படித்து முடித்து வெளியே வருகிறோம். நாங்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் சிரமப்பட்டு வருகிறோம்.

இந்த நிலையில் மேலும் புதிதாக தனியாருக்கு கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. அரசு அந்த முடிவை கைவிட வலியுறுத்தி இன்று வகுப்புகளை புறக்கணித்து உள்ளிருப்பு போராட்டம் நடத்துகிறோம். மேற்கொண்டு போராட்டத்தை தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளோம் என்றனர்.

# மூதாட்டியை கடப்பாரையால் தாக்கி 38 பவுன் நகை துணிகர கொள்ளை



**குன்னம், மார்ச் 14:**

பெரம்பலூர் மாவட்டம் மங்களமேடு அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது வாலிகண்டபுரம் கிராமம். இங்குள்ள முஸ்லிம் தெருவைச் சேர்ந்தவர் சையதுகான். இவரது மனைவி தாராபி (வயது 65). வயதான இந்த தம்பதியினர் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறார்கள்.

இந்தநிலையில் நேற்று இரவு அனைவரும் சாப்பிட்டுவிட்டு தூங்க சென்றனர். இதில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மாடி அறையில் தூங்கினர். தாராபி மட்டும் வீட்டின் கீழ் அறையில் தூங்கினார். நள்ளிரவு சுமார் 1.30 மணியளவில் வீட்டின் பின்பக்க சுவர் ஏறிக்குதித்து 4 மர்ம நபர்கள் உள்ளே புகுந்தனர்.

முகமூடி அணிந்திருந்த அவர்கள் தனியாக தூங்கிய தாராபியை தாங்கள் கொண்டு வந்திருந்த கடப்பாரையால் திடீரென்று தாக்கியுள்ளனர். இதனை சற்றும் எதிர்பாராத தாராபி ரத்த வெள்ளத்தில் மயங்கினார். பின்னர் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் தாராபி கழுத்தில் அணிந்திருந்த செயின் மற்றும் வீட்டின் பீரோவில் வைத்திருந்த மொத்தம் 38 பவுன் நகைகளை கொள்ளையடித்து விட்டு தப்பிச்சென்றனர்.

நேற்று காலை நீண்ட நேரமாகியும் தாராபி வீட்டை திறந்து வெளியே வராததால் சந்தேகம் அடைந்த அவரது கணவர் சையதுகான் மற்றும் உறவினர்கள் கதவை தட்டினர். அப்போதும் திறக்கப்படவில்லை. இதனால் பதட்டம் அடைந்தவர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அங்கு தாராபி ரத்தவெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்.

உடனடியாக இதுகுறித்து மங்களமேடு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் விரைந்து வந்த போலீசார் தாராபியை மீட்டு பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அதன்பின்னரே 38 பவுன் நகைகள் கொள்ளை போனது தெரியவந்தது.

இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள மங்களமேடு போலீசார், அந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவான காட்சிகள் மூலம் முகமூடி கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகிறார்கள். இந்த சம்பவம் அந்த பகுதி பொதுமக்களிடையே பரபரப்பையும், பீதியையும் ஏற்படுத்தி உள்ளது.

# விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த 7 வயது சிறுவனின் உடல் உறுப்புகள் தானம்


**திருப்பூர், மார்ச் 14:**

திருப்பூர் மாவட்டம் உடுமலையை சேர்ந்தவர் விக்னேஷ். இவரது மனைவி பிரியதர்ஷினி. இந்த தம்பதிக்கு சிவாதித்யா(7), நிலன் ஆதித்யா என 2 மகன்கள் உள்ளனர்.

இந்த நிலையில் சம்பவத்தன்று சிவாதித்யா தனது தாத்தாவுடன் காரில் சென்றார். அப்போது கார் கட்டுப்பாட்டை இழந்து அங்குள்ள மரத்தில் மோதி விபத்தில் சிக்கியது. இதில் தாத்தா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சிறுவன் சிவாதித்யா பலத்த காயம் அடைந்தார். அவரை அவரது பெற்றோர் கோவை சூலூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சிவாதித்யா, இன்று மூளைச்சாவு அடைந்தார்.

இதுகுறித்து அவரது பெற்றோரிடம் டாக்டர்கள்



தெரிவித்தனர். அவர்கள் தங்கள் மகனின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர். இதையடுத்து தமிழ்நாடு உறுப்பு தான ஆணைய அனுமதியுடன், சிறுவனின் கண்ணை தவிர மற்ற 6 உடல் உறுப்புகள் எடுக்கப்பட்டு தானமாக பெறப்பட்டன. தானமாக பெறப்பட்ட உடல் உறுப்புகள் ஈரோடு மற்றும் சென்னையில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 7 வயது சிறுவனின் உடல் உறுப்பு தானத்தால் 6 பேர் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

# இளைஞர் ஆகாஷின் உடலில் 28 இடங்களில் காயம் மூளையில் ரத்தக்கசிவு : அம்பலமான அதிகாரத்தின் அத்துமீறல்

**தூத்துக்குடி, மார்ச் 14:**

இரும்புக் கம்பியால் காலை அடித்து உடைத்த காவல்துறை

இளைஞர் ஆகாஷ்மீது ஏற்கனவே சில குற்ற வழக்குகள் இருந்ததாக கூறப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தன்குளம் தந்தை, மகன் கொலைவழக்கின் வடுவே இன்னும் ஆறாதநிலையில், அடுத்தடுத்த ரணங்களை தமிழ்நாடு காவல்துறை மக்களுக்கு கொடுத்துவருகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தற்போதுவரை 37 லாக்-அப் மரணங்கள் நடந்துள்ளதாக பாஜக தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் இத்தனை வழக்குகளில் ஒருசிலவையே மக்களுக்கு வெளிச்சமாகி பெரிதாக வெடித்தவை.

அந்தவகையில் அஜித்குமார் மரணவழக்கை தொடர்ந்து தற்போது அரங்கேறிய கொடூரம்தான் மானாமதுரை இளைஞர் ஆகாஷ் மரணம். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் இருவரை அரிவாளால் வெட்டியதாக ஆகாஷ் டெலிசன் மற்றும் அவரது நண்பர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதின்போது தப்ப முயற்சித்து பாலத்திலிருந்து விழுந்து ஆகாஷின் கால் முறிந்ததாக



காவல்துறையினர் தெரிவித்து, அவரை மருத்துவமனையில் அனுமதித்தாக தெரிவித்தனர். தொடர்ந்து மேல்சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்காக மாற்றப்பட்டதாகவும் கூறினார்.

ஆனால் அங்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஆகாஷ் உயிரிழந்ததாக போலீசார் தெரிவித்தனர். காலில் எலும்பு முறிவு ஏற்பட்டால் மூச்சுத்திணறல் ஏற்படுமா என்னும் கேள்வி சிறுகுழந்தைக்குக் கூட எழும். ஆனால் காவல்துறை மரணத்திற்கு காரணமாக இதைக்கூறியது.

ஆனால் தனது மகன் காவல்துறையினராலேயே அடித்துக்கொல்லப்பட்டதாகவும், அவரது மரணத்திற்கு நீதி வேண்டும் எனவும் ஆகாஷின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத்தொடர்ந்து இந்த சம்பவம் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்திற்கு வர தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதனைத்தொடர்ந்து வெளிவந்த ஆகாஷின் ரிமாண்ட் ரிப்போர்ட் வாக்குமூலங்களும் அவரது மரணத்திற்கு காவல்துறையே காரணம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்தது. போலீசாரே தனது காலை உடைத்ததாகவும், அதன்பின் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் தெரிவித்திருந்தார். இதனிடையே அவரது உடலை உடற்கூராய்வு செய்ய உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் அவரது உடற்கூராய்வு முடிவுகள் வெளிவந்து காவல்துறையே இந்த மரணத்திற்கும் காரணம் என ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. அதன்படி ஆகாஷின் உடலில் 28 இடங்களில் காயங்கள் இருந்ததாகவும், வலதுகாலின் நடுப்பகுதியில் எலும்புகள் முறிந்திருந்தாகவும், மூளையில் ரத்தக்கசிவு இருந்ததாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆகாஷ் போலீசார் தாக்குதலிலேயே உயிரிழந்தார் என்பது தெளிவாகியுள்ளது.

# வரும் சட்டசபை தேர்தலில் கூட்டணி அமைத்து தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டி - சசிகலா




ஜெயலலிதா பிறந்தநாளான கடந்த பிப்ரவரி 24-ந்தேதி கட்சியின் கொடியை அறிமுகம் செய்த சசிகலா இன்று கட்சியின் பெயரை அறிவித்தார். அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக்கழகம் (அஇபுதமமுக) என்ற தனது கட்சியின் பெயரை அறிவித்தார். சசிகலா தொண்டர் ஆரம்பித்த கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த சசிகலா கூறியதாவது:

* ஜெயலலிதா மறைவிற்கு பின்னர் அனைத்தும் தலைகீழாக மாறி விட்டது.

* தொண்டர் ஆரம்பித்த கட்சியில் தன்னை இணைத்து கொண்டவர் எம்.ஜி.ஆர்.

* வரும் சட்டசபை தேர்தலில் அ.இ.பு.த.ம.மு.க. தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிடுவேன்.

* வரும் சட்டசபை தேர்தலில் கூட்டணி அமைத்தே போட்டியிடுவேன்.

* ஒத்த கருத்து கொண்ட கட்சிகளுடன் வரும் தேர்தலில் கூட்டணி அமைத்து தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிடுவேன்.

வரும் சட்டசபை தேர்தலில் தனித்து போட்டியா? என்ற கேள்விக்கு நாங்கள் எப்போதும் தோப்பு என அவர் விளக்கம் அளித்தார்.























ADIYOGI
REAL ESTATE WHOLESALE
VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ருவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901










**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!





அவன் வாங்கி தந்த
சிகப்பு கல் மூக்குத்திக்கு
இணையாய் சிவந்தது
அவள் முகம் அவன்
தந்த முத்தத்தால்


பலமுறை கடந்து
போனாலும்
அவள் மட்டும்
ஏனோ பக்கத்தில் இருப்பது
போன்ற உணர்வு
மனதை வருடிப்போகிறது

உன்னருகில்
உன் நினைவில்
மட்டுமே
என் மகிழ்ச்சியெல்லாம்

எத்தனை மைல் தூரம்
நீ இருந்தாலும்
எந்தன் மனதை
சிறைப் பிடித்தவன் நீயே

தட்டி விடவே
நினைக்கிறேன்
ஒட்டிக் கொள்ளும்
உன் நினைவுகளை

## வாழ்க்கை தத்துவம்...



ஒரு பிரச்சனையின் ஆயுள்
பெரும்பாலும் அதை
விடப் பெரும் பிரச்சனை
வரும் வரை தான்

அடுத்தவன் என்ன நினைப்பான்னு
வாழ ஆரம்பிச்சா அப்பவே உன்
நிம்மதி உன்ன விட்டு போயிடும்

தூக்கிவிட்ட வரை மறக்காதே
தூக்கி போட்ட வரை
கனவில் கூட நினைக்காதே

ஒரு பிரச்சனை என்றால்
சூழ்நிலை மட்டும் நினைக்காதீர்கள்
சில நாய் வேஷமிட்ட நரிகளின்
சூழ்ச்சியாக கூட இருக்கலாம்
என்பதை மறக்காதீர்கள்

# நாணயஸ்தன்!

" ஐயா..வணக்கம்ங்க ! "

குரல் கேட்டு , படித்துக்கொண்டி ருந்த பேப்பரை பக்கத்தில் இருந்த டீபா மீது மடித்து வைத்த கணேசன் ஈ ஸி சேரில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

" வா காளி ! ".

" ஏதோ முக்கியமான வேலை இருக்குன்னு உங்க வீட்டு வேலை க்காரன் ஆறுமுகம் சொன்னான்ங்க. அதான் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன் ! "

" ஆமாம் ! ஒரு முக்கியமான வேலை..காதும் காதும் வச்சா மாதிரி முடிக்கணும்"

" என்ன செய்யணும் சொல்லு ங்க. .கை கால் எடுக்கணுமா.இல்ல நல்லா வலிக்குறமாதிரி ஏதாவது ஒரு பார்ட்ட தட்டி விடட்டுமா ? "

" உசுரை எடுக்கணும் ! "

" ஆள் யாருன்னு சொல்லுங்க ! முடிச்சுடறேன் "

கணேசன் டீபா மேலிருந்த ரெக்ஸின் பேக்கை எடுத்தார். அதிலி ருந்து பாஸ்போர்ட் சைசில் இருந்த ஒரு வண்ணப் புகைப்படத்தை எடுத்து காளியிடம் காண்பித்தார். புகைப் படத்தில் ஒரு அழகான வாலிபன் புன்னகை புரிந்து கொண்டிருந்தான்.

" இந்த ஃபோட்டோவில் இருக் கிறவன் பேர் ரமணன். இவனத்தான் நீ க்ளோஸ் பண்ணனும். அட்ரஸ் பின்னாடியே எழுதியிருக்கு."

" சரிங்க. "

" ரேட் எவ்வளவு ? "

" உங்கக்கிட்ட நான் என்ன பெரிசா கேட்கப்போறேன்.." தலை கவிழ்ந்து சில வினாடிகள் யோசனை செய்த வன்,. " அஞ்சு லட்சம் கொடுத்திடு ங்க !.".என்றான்.

" மை காட் !,அவ்வளவு ஆகுமா ? " என்றார் திகைப்புடன் கணேசன்.

" ஐயா !.கொலை செய்யணுங்குறீ ங்க ! ரிஸ்க் ஜாஸ்தி ! என்னோட கூட ஒருத்தன். நாங்க ரெண்டுபேரும் சேர்ந்து காரியத்த கச்சிதமா முடிக்க ணும். ரேட் பார்க்காதீங்க ! ".

" நீ சொல்ற அந்த இன்னொரு வனுக்கு என்னைப் பத்தி விவரமெ ல்லாம் சொல்லாதே ! "

" வேலையிலதாங்க எனக்கு பார்ட்னர். மத்த விஷயமெல்லாம் அவனுக்கு அநாவசியம் ! நீங்க கவல ப்படாம இருங்க ! ".

" சரி. இரு இதோ வந்துடறேன்." எனக் கூறியவர் எழுந்து சென்று, அறைக்குள் நுழைந்தார். லாக்கரைத் திறந்து இரண்டு லட்சம் ரூபாவை எடுத்து ஒரு துணிப்பையில் வைத்த வர் , பிறகு லாக்கரை மூடிவிட்டு ஹாலுக்குள் நுழைந்தார்.

" காளி ! இந்தா ரெண்டு லட்சம் முன் பணம் ! பாக்கி மூணு லட்சம் வேலை முடிஞ்சதும் வாங்கிக்கோ ! ".

கணேசன் நீட்டிய பணப்பையைப் பெற்றுக் கொண்ட காளி , ஐயா.!. இந்தப்போட்டோவ வச்சிக்கிட்டமா ? ".

" தாராளமா...அப்புறம் காளி ! எந்தச் சந்தர்ப்பத்திலேயும் என் பேர் வரக்கூடாது".

" நீங்க எதுக்கும் கவலப்படாம நிம்மதியா இருங்க..."

" சரி, எவ்வளவு நாள்ல முடிப்பே ? "

" சரியா ஒருவாரம்ங்க ! அதுக்கு ள்ளாறவே முடிஞ்சிரும். வரேன்ங்க ! "

காளி செல் வதையேப் பார்த்துக் கொண்டிருந்த கணேசனுக்கு இனம் தெரியாத பயம் வந்து பந்தாய் நெஞ் சக்குழியில் அடைத்துக் கொண்டது ! அந்த ஏழைரமணனை மறந்துவிடு என்று எத்தனையோத் தடவை சொல் லியும் மகள் கேட்காது போனதால் அவனை தீர்க்க தான் முடிவு எடுத் ததில் தவறு இல்லை என்கிற சமாதா னமும் அவர் மனதில் எழுந்தது !

அடுத்த இரண்டுநாள் காளி வெகு பிசியாக இருந்தான். ரமணனின் விவ ரங்களை சேகரிக்க ஆரம்பித்தான். ரமணன் இருப்பது ஒரு முட்டுச்சந்தில் நான்கு குடித்தனங்கள் இருக்கிறஒரு ஓட்டு வீட்டில் ! அதில் ரமணனும் அவன் தாயும் அடக்கம் ! பின்பக்கம் அவுட்ஹவுஸில் குடியிருந்தார்கள். காலை எட்டரைமணிக்கு தன் பழைய மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆஃபீஸ் கிளம்பினால் மாலை ஆறரை மணிக்கு வீடுதிரு ம்புவான். சிவில் சப்ளை ஆஃபீஸில் உத்தியோகம் !

ரமணனை தீர்த்துக்கட்ட திட்டம் போட்டுக் கொண்டிருந்தான் காளி. தான் மாட்டிக்கொள்ளாதபடி கச்சி தமாக முடிக்க வேண்டும் என்கின்ற உறுதியான எண்ணமும் அவன் மனத் தில் வந்த வண்ணமிருந்தது !

அன்று அரக்க பரக்க ஓடிவந்து கணேசன் முன்னால் நின்றான் வே லைக்காரன் ஆறுமுகம்.

" ஐயா ! அந்தப் பயல் ரமணன் ஒழிஞ்சாங்க ! " என்றான்மூச்சிரைக்க.

" டேய் ! என்ன சொல்றே ? " சந்தோ ஷம் மிகுதியால் கேட்டார் கணேசன்.

" ஆமாங்க ! காலையில ஆஃபீஸ் போகும்போது ஓவர்டேக் பண்ணின தண்ணீர் லாரியில மாட்டிக்கிட்டு போயிட்டான்க !".

ரமணன் கொலை செய்யப்பட வில்லை. தன்மீது இனிகொலைப்பழி விழாது. மிகுந்த ஆஸுவாஸமாய் இருந்தது. ஆனால் அந்த அண்ணா டங்காய்ச்சியை காதலித்து வந்த மகள் சிலநாள் கண்ணீர் விடுவாள். பிறகு சுதாரித்துக் கொள்வாள் என்கிற நினைப்பும் வந்தது !

அன்று மாலை கணேசன் வீட்டி னுள் நுழைந்தான் காளி.

" வா காளி ! " வரவேற்றவர் மனத்தில் காளியின் ரியாக்ஷ்ன் எப்படி இருக்கும் என்ற எண்ணம் எழுந்தது. ஒருவேளை ரமணனின் சாவை தனக்கு அனுகூலமாக எடுத்துக்கொண்டு மீதிப் பணம் மூன்று லட்சத்தைக் கேட்டால்......

" காளி ! நீ கெட்டிக்காரன். சொன்ன படி ஆளைத் தீர்த்துக்கட்டிட்டே . வெல் டன் காளி ! " என்றார் கணேசன் அவ னைக் குறுகுறுவென்று பார்த்தபடி.

" ஐயா !;நீங்க நினைக்கிறபடி ரமணனநான் கொலை செய்யலீங்க !"

" அப்படியா ! "

" ஆமாங்க ! ரமணன் ஆக்ஸிடெண் ட்டுல அடிபட்டு செத்துப்போனான். அதனால இந்தாங்கய்யா நீங்க கொடுத்தஅட்வான்ஸ் பணம் ரெண்டு லட்சம் ! செய்யாத வேலைக்கு நான் கூலி வாங்குறதில்லீங்க . நான் வரேன் ! " ரமணனின் ஃபோட்டோ அடங்கிய பணப்பையைகணேசனிடம் தந்துவிட்டு அகன்றான் காளி.

காளி செல்வதையே பிரமிப்பு கலந்த திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் கணேசன்.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**
லால்குடி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*டாக்டர்: காலையில என்னம்மா சப்பிட்ட?*

*பெண்: பர்கர், பீட்சா, சாண்ட்வெஜ் சாப்பிட்டேன்*

*டாக்டர்: இங்க பாருமா இது வாட்ஸப்போ, இன்ஸ்டகிராமோ இல்லை. இது ஹாஸ்பிடல். உண்மையை சொல்லு.*

*பெண்: சாரி டாக்டர்..பழைய சோறும் கருவாட்டு குழம்பும் சார்..*



# தினம் ஒரு சமையல்



## விரத கோவில் புளியோதரை

### தேவையான பொருட்கள்:

*1டேபிள் ஸ்பூன் -கடலை பருப்பு*
*1டேபிள் ஸ்பூன் -உளுத்தம் பருப்பு*
*1/2 டேபிள் ஸ்பூன் தனியா*
*1/2 டேபிள் ஸ்பூன் -வெந்தயம்*
*5 காய்ந்த மிளகாய்*
*1 டீஸ்பூ -எள்ளு*

### தாளிக்க :

*3 டேபிள் ஸ்பூன் -நல்லெண்ணெய்*
*1 டீஸ்பூன் -கடுகு*
*1டீஸ்பூன் -உளுத்தம் பருப்பு*
*2டீஸ்பூன் -கடலை பருப்பு*
*3 -மிளகாய்*
*1/2 டீஸ்பூன் -பெருங்காயம்*
*1/4 க -வேர்க்கடலை*
*1/4 டீஸ்பூன் -மஞ்சள் தூள்*
*ஒரு எலுமிச்சை அளவு-புளி*
*சிறிதளவு-கறிவேப்பிலை*
*தேவையான அளவு-உப்பு*
*1 டேபிள் ஸ்பூன் -வெல்லம்*
*2 கப் -சாதம்*



### செய்முறை:

கடாயில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி கடலை பருப்பு உளுத்தம் பருப்பு சேர்க்கவும்.

தனியா வெந்தயம் காய்ந்த மிளகாய் போட்டு வறுக்கவும்.

பின்னர் எள்ளு போட்டு பொரிந்தவுடன் ஆற வைத்து மிக்ஸியில் பொடி செய்யவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு உளுத்தம் பருப்பு சேர்க்கவும்.

பின்னர் கடலை பருப்பு காய்ந்த மிளகாய் வேர்க்கடலை போட்டு வறுக்கவும்.

அதனுடன் கறிவேப்பிலை பெருங்காயத்தூள் மஞ்சள் தூள் சேர்க்கவும்.

பின்னர் புளி கரைசல் உப்பு சேர்த்து கொதிக்க விடவும்.

நன்றாக கொதித்தவுடன் அதில் வெல்லம் சேர்த்து இறக்கவும்.

தட்டில் ஆற வைத்த சாதத்தில் பொடி மற்றும் கொதித்த புளி கரைசல் சேர்த்து கிளறவும்.

இப்போது சுவையான கோவில் புளியோதரை ரெடி.

## வெண்டைக்காய் பயன்கள்



1. ஊட்டச்சத்து நிறைந்தது: குறைவான கலோரி கொண்ட வெண்டைக்காயில் நார்ச்சத்து, வைட்டமின் சி, வைட்டமின் கே, பொட்டாசியம், மாக்னீசியம் போன்ற தாதுக்கள், ஆண்டி ஆக்ஸிடெண்ட் ஆகியவை நிறைந்துள்ளன. வெண்டைக்கய் ஊற வைத்த நீரை பருகுவதன் மூலம் நீர்த்த வடிவத்தில் இந்த சத்துகள் அனைத்தும் உங்களுக்குக் கிடைக்கின்றன.

2. செரிமான ஆரோக்கியம்: வெண்டைக்காயில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் இது செரிமானத்தை மேம்படுத்தி மலச்சிக்கல் வராமல் தடுக்கிறது. வெண்டைக்காய் ஊற வைத்த நீரை பருகுவதன் மூலம், இது மலமிளக்கியாக செயல்பட்டு சீரான இடைவெளியில் மலம் கழிவதற்கு வழிவகை செய்கிறது.

3. சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும்: ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதில் வெண்டைக்காய் உதவியாக இருப்பதாக ஆரம்பகட்ட ஆய்வுகள் கூறுகின்றன. வெண்டைக்காயில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்து, செரிமானப் பாதையில் உள்ள குளுக்கோஸ் உறிஞ்சப்படுவதை மெதுவாக்குவதற்கு உதவுகிறது. இதன் மூலம் உங்கள் உடலில் சர்க்கரை அளவு அதிகரிக்காமல் பார்த்துக்கொள்கிறது.

4. நீர்ச்சத்து: உங்கள் உடலுக்கு நன்மை பயக்கும் திரவ பானங்களை குடிக்க வேண்டுமென விரும்பினால் சுவை மிகுந்த வெண்டைக்காய் நீரை பருகுங்கள். இது உங்கள் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்ளும்.

5. ஆன்டி ஆக்ஸிடன்ட் பண்புகள்: நமது உடலை ஆக்ஸிடேட்டிவ் ஸ்ட்ரஸ் மற்றும் ஃப்ரீரேடிக்கல்ஸ் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உதவும் ஆன்டி ஆக்ஸிடன்ட் வெண்டைக்காயில் அதிகளவு உள்ளது. நமது ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்திலும் உடலின் பல்வேறு செயல்பாடுகளிலும் இந்த ஆண்டி ஆக்ஸிடெண்ட் முக்கியப் பங்கு வகிக்கிறது.

# 24 மணிநேரம் கெடு, நீக்கா விட்டால்... எச்சரிக்கை விடுத்து ராஷ்மிகா மந்தனா வெளியிட்ட பரபரப்பு பதிவு

கன்னடத்தில் வெளியான க்ரிக்கி பார்ட்டி என்ற படத்தின் மூலம் திரையுலகில் நாயகியாக அறிமுகமானவர் நடிகை ராஷ்மிகா மந்தனா.

கன்னட சினிமாவில் இருந்து அப்படியே தெலுங்கு, தமிழ், இந்தி என பல மொழிகளில் என்ட்ரி கொடுத்து வெற்றிப்படங்களையும் கொடுத்துள்ளார். குறுகிய காலகட்டத்திலேயே ரசிகர்களின் மனதை வென்ற இவரை National Crush என ரசிகர்கள் அழைத்து வந்தனர்.

சமீபத்தில் ரசிகர்கள் பலரும் எதிர்ப்பார்த்தது போல் இவரும் விஜய் தேவரகொண்டாவும் நிஜ வாழ்க்கையில் இணைந்தனர், திருமணம் செய்துகொண்டனர். இந்த நிலையில் நடிகை ராஷ்மிகா மந்தனாவின் அம்மா சுமார் 8 வருடங்களுக்கு முன்பு பேசிய ஒரு ஆடியோ இப்போது சமூக வலைதளங்களில் வெளியாக பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

அதில், ராஷ்மிகா மற்றும் நடிகர் ரக்ஷித் ஷெட்டியின் நிச்சயதார்த்தத்தின் போது ஏற்பட்ட சில சிக்கல்கள் குறித்து அவரது தாயார் பேசுவதாகக் கூறப்படுகிறது.

இதனை கண்ட ராஷ்மிகா மந்தனா வெளியிட்டுள்ள பதிவில், அந்த ஆடியோவைப் பகிர்பவர்கள் 24 மணி நேரத்திற்குள் அதை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். அவ்வாறு நீக்க தவறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதுவரை இந்த அற்புதமான பயணத்தில் என்னுடன் இருந்த எனது அன்புக்குரிய மக்களுக்கும், இந்த விவகாரத்தில் தொடர்புடைய மற்றவர்களுக்கும் கடந்த 8 ஆண்டுகளாக நடந்து வருகின்றன.

எனது பேச்சுக்கள் சூழலுக்குப் புறம்பாக மாற்றப்படுவதையும், நான் சொல்லாத விஷயங்கள் தவறான கதைகளாகச் ஜோடிக்கப்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன்.

வெறும் வியூஸ்காகவும், ஈடுபாட்டிற்காகவும் (ENGAGEMENT) வெறுப்புணர்வு பரப்பப்படுகிறது. பொது வாழ்க்கையில் வரும் விமர்சனங்களை நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால் கடந்த 24 மணி நேரத்தில் நடந்த செயல்கள் அத்துமீறல்கள், இதை என்னால் புறக்கணிக்க முடியாது என பதிவு செய்துள்ளார்.






இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஹிமா பிந்து, தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அவ்வப்போது பதிவிடுவார். அந்த வகையில் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது பதிவு செய்துள்ளார். ரசிகர்கள் மத்தியில் இந்த புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன. இதோ:எ

# டிஎன்ஏ பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதிமன்றம்... மகனின் புகைப்படத்தை பகிர்ந்த ஜாய் கிரிசில்டா



கடந்த ஆண்டு பிரபல ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா, சமையல் கலைஞர் மற்றும் நடிகரான மாதம்பட்டி ரங்கராஜ், தன்னைத் திருமணம் செய்து ஏமாற்றியதாகவும், கர்ப்பமாக இருந்தபோது தன்னைக் கைவிட்டதாகவும் குற்றம் சாட்டினார். தொடக்கத்தில் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்த ரங்கராஜ், பின்னர் மாநில மகளிர் ஆணைய விசாரணையின்போது ஜாயை காதலித்ததை ஒப்புக் கொண்டதாகவும், ஆனால் அந்தக் குழந்தைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என தெரிவித்ததாக தகவல் வெளியானது. இந்த விவகாரத்தில் ஜாய் கிரிசில்டாவின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, சென்னை உயர் நீதிமன்றம் மாதம்பட்டி ரங்கராஜுக்கு டிஎன்ஏ பரிசோதனை செய்ய அண்மையில் உத்தரவிட்டது. இதனிடையே தனது மகன் தொடர்பான புகைப்படங்களை அடிக்கடி சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகிறார் ஜாய் கிரிசில்டா.

இந்நிலையில் இன்று மகன் ராகா ரங்கராஜின் முகத்தை காட்டியுள்ளார். இதுவரை முகத்தை மறைத்து பதிவிட்டு வந்த அவர், இன்று மகனின் முகத்தை முழுவதுமாக காண்பித்து சமூக வலைதளங்களில் புகைப்படங்களை பகிர்ந்துள்ளார். இதற்கு நெட்டிசன்கள் பலரும், இருவர் பிரச்சனையில் குழந்தையின் புகைப்படத்தை பயன்படுத்தாதீர் என கருத்து தெரிவித்து வருகின்றனர்.

ஜாய் தனது முதல் கணவரை ஜூலை 2024-ல் தான் விவாகரத்து செய்த நிலையில், டிசம்பர் 2023-ல் ரங்கராஜைத் திருமணம் செய்ததாகக் கூறுவது சட்டரீதியான கேள்விகளை எழுப்புவதாக நீதிமன்றம் குறிப்பிட்டதும், மாதம்பட்டி ரங்கராஜுக்கு ஏற்கனவே ஸ்ருதி என்ற மனைவியும், இரண்டு மகன்களும் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# "மாயக்கண்ணன் லீலை"



கோகுலத்தில் ஒரு நாள் கண்ணன், பலராமன் மற்றும் இடை சிறுவர்கள் எல்லோரும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கண்ணன் மண்ணை எடுத்து வாயில் போட்டு தின்றான் .அதைப் பார்த்த சிறுவர்களும் அண்ணன் பலராமனும் யசோதை தாயிடம் சொன்னார்கள். அம்மா கண்ணன் மண்ணை தின்றான் ஏன்?என்று நீயே கேள் என்று பலராமனும் கூறினான். குழந்தையின் நலனை விரும்பி யசோதை கிருஷ்ணனின் கையை பிடித்துக் கொண்டு அதட்டி, மிரட்டி ஏன் மண்ணை தின்கிறாய் ?என்று கேட்டாள்.அதற்கு கிருஷ்ணன் அம்மா நான் மண்ணை தின்ன வில்லை .எல்லோரும் பொய் சொல்லுகிறார்கள். என் மீது கோள் சொல்லுகிறார்கள் என்றான். அப்படியானால் நீ வாயை திற என்றாள்.

கிருஷ்ணன் அவர்கள் சொல்வது உண்மை என்றால் நீயே என்னுடைய வாயைப் பார் என்றார்.

பகவான் தன்னுடைய லீலையை புரிந்தார். கிருஷ்ணன் வாயை திறந்தார். யசோதை கிருஷ்ணனின் வாயில் உலகத்தையே கண்டாள்.வாயு, அக்னி, சூரியன் ,சந்திரன், நட்சத்திரம், வான், திசை ,மழை, தீவு ,கடல் இவைகளுடன் பூலோகத்தையும் கண்டாள். தன்னுடைய குழந்தையின் வாயில் வேறுபட்ட அடையாளங்களுடன் விசித்திரமாய் தோன்றும் இந்த உலகத்தையும், கோகுலத்தையும் அதில் தானும் உள்ளதை பார்த்தாள். ஆச்சரியம் அடைந்தாள். இது என்ன கனவா? அல்லது தேவ மாயையா? என்று அவளுக்கு புரியவில்லை. என் குழந்தைக்கு இயற்கையாகவே ஏற்பட்டுள்ள ஒரு ஆத்ம சக்தியா என்று குழம்பினாள். கிருஷ்ணன் இந்த மாயையை உண்டாக்கினார். யசோதை தன்னிலை மறந்தாள் .சிறிது நேரம் கழித்து மனம் தெளிந்து ,தன் மகனை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு ஆசையுடன் கட்டித் தழுவினாள். கண்ணனின் மீது அதிக பாசம் கொண்டாள்.





- எம் .எல். பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

# தினம் ஒரு தலைவர்கள் உமாபாய் குந்தாபூர் வரலாறு



உமாபாய் குந்தாபூர் (1891-1992) கர்நாடகாவைச் சேர்ந்த இந்திய விடுதலை இயக்க வீராங்கனையாவார். இவர் சுதந்திர போராட்ட வீரர்களின் குழுவான பாகினி மண்டலின் நிறுவனராக இருந்தார். நாராயண் சுப்பாராவ் ஹார்திகர் நிறுவிய இந்துஸ்தானி சேவா தளத்தின் பெண்கள் பிரிவின் தலைவராகவும் இருந்தார்.

பிறப்பு மற்றும் கல்வி
1892 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி குந்தாப்பூரில் பிராமணரான தந்தை கோலிகேரி கிருஷ்ணராவ், தாயார் துங்காபாய் ஆகியோருக்குப் பிறந்த உமாபாய்க்கு பவானி கோலிகேரி என்ற பெயர் இருந்தது. 1898 இல், இவர்கள் குடும்பம் மும்பை நகருக்கு குடிபெயர்ந்தது.

சொந்த வாழ்க்கை
13 வயதில், சஞ்சீவ ராவ் என்பவரை 1905 இல் மணந்தார். இவருக்கு ஐந்து சகோதரர்கள் இருந்தனர்.
வாழ்க்கை
1920 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி பாலகங்காதர திலகரின் இறுதி ஊர்வலத்தின் மூலம் உமாபாய் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட உத்வேகம் பெற்றார். அந்த சமயங்களில் காங்கிரசின் சேவையைப் பார்த்த பிறகு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்தார்.

செப்டம்பர் 4, 1920 அன்று மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தபோது, உமாபாய் தனது சகோதரர் ரகுராம ராவ் மற்றும் கணவர் சஞ்சீவ ராவ் ஆகியோருடன் இயக்கத்தில் பங்கேற்றார். இவர் காதியின் பயன்பாட்டை ஊக்குவித்தார். வீடு வீடாகச் சென்று பெண்களை சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க ஊக்குவித்தார். கூடுதலாக, இவர் பல நாடகங்களை எழுதி மேடையில் நிகழ்த்தினார். நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் மற்றவர்களை இயக்கத்தில் சேர ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இருந்தார்.

28 மார்ச் 1923 இல் காசநோயால் அவரது கணவர் சஞ்சீவ ராவ் இறந்த பிறகு, அப்போது 31 வயதாக இருந்த உமாபாய், தனது மாமனாருடன் ஹுப்ளிக்குத் திரும்ப முடிவு செய்தார். அங்கு இவரது மாமனார் ஆனந்த ராவ் ஹுப்ளியில் கர்நாடக அச்சகத்தை நடத்தி வந்தார். பின்னர் உமாபாய் 1923 இல் நாராயண் சுப்பாராவ் ஹார்திகரால் நிறுவப்பட்ட இந்துஸ்தானி சேவா தளத்தில் ஈடுபட்டார். இந்திய இளைஞர்களை சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க ஊக்குவிக்கும் நோக்கத்துடன். சங்கத்தில் சேர்ந்தது மட்டுமின்றி, மகளிர் பிரிவு தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார். கூடுதலாக, உமாபாய் திலக் கன்யா பள்ளியை மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இதுவும் முதலில் ஹார்திகரால் நிறுவப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டம்
சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற உமாபாய், 1932ல் ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு 4 மாதங்கள் ஏர்வாடா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும் போது உமாபாய்க்கு மாமனார் ஆனந்த ராவ் இறந்த செய்தி கிடைத்தது. வலுவான ஆதரவாளராக இருந்த ஆனந்த ராவின் இழப்பு உமாபாயை மிகவும் பாதித்தது. அப்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த சரோஜினி நாயுடுவும் உமாபாய்க்கு ஊக்கம் அளித்து, போராட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மறைமுகமாக நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். உமாபாய் விடுதலையானதும், ஆனந்த ராவ் நிறுவிய கர்நாடக அச்சகத்தை பிரித்தானிய அரசு கைப்பற்றியதையும், திலக் கன்யா பள்ளி மூடப்பட்டதையும் இவர் கண்டறிந்தார். கூடுதலாக, ஆனந்த ராவ் நிறுவிய பகினி மண்டல் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் சட்டவிரோதமானது என்று கருதப்பட்டது. இந்த பின்னடைவுகள் இருந்தபோதிலும், உமாபாய் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு தனது வீட்டில் அடைக்கலம் அளித்து வந்தார். 1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது, இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது. பல போராளிகள் உமாபாயின் இல்லத்தில் தஞ்சம் புகுந்தனர். அங்கு இவர் அவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்தை வழங்கி வந்தார்.



PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை சனிக்கிழமை 14.03.2026

# “கடவுள் கருணையால் உயிர் தப்பினேன்” - முன்னாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லா கருத்து

**ஸ்ரீநகர், மார்ச் 14:**

கடவுளின் கருணையால் உயிர் தப்பினேன் என்று ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதல்வரும், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவருமான ஃபரூக் அப்துல்லா தெரிவித்தார்.

ஜம்முவின் கிரேட்டர் கைலாஷ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் ஃபரூக் அப்துல்லாவும், துணை முதல்வர் சுரீந்தர் சவுத்தரியும் பங்கேற்றுவிட்டு புறப்படத் தயாராயினர்.

அப்போது, ஃபரூக் அப்துல்லாவின் பின்னால் இருந்து வந்த ஒரு நபர் கைத்துப்பாக்கியால் அவரை நோக்கி சுட்டார். உடனே, பாதுகாப்பு அதிகாரிகள் அந்த நபரை மடக்கிப் பிடித்தனர். இதனால், குண்டு குறிதவறிச் சென்றது. இதையடுத்து நூலிழையில் ஃபரூக் அப்துல்லா உயிர் தப்பினார்.

இதுகுறித்து நேற்று செய்தியாளர்களிடம் ஃபரூக் அப்துல்லா கூறியதாவது: கடவுளின் கருணையால் நான் உயிர் தப்பினேன். திருமண நிகழ்ச்சியில் துப்பாக்கியால் சுடப்பட்ட விவரம் கூட எனக்குத் தெரியாது. அந்தத் தாக்குதலில் இருந்து கடவுள் தான் என்னைக் காப்பாற்றியுள்ளார்.

திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் வீட்டுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது எனது பின்பக்கமிருந்து ஒரு பெரிய சத்தம் கேட்டது. திருமண விழா என்பதால் பட்டாசு வெடிக்கிறார்கள் என்று நினைத்தேன். அப்போது ஒருவர் என் அருகே தடு மாறி விழுந்தார். அப்போது கூட எனக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. அதன் பின்னர்தான் துப்பாக்கியால் அந்த நபர் சுட முயன்ற விஷயம் தெரிய வந்தது. அவர் யார் என்பது தெரியவில்லை.

ஜம்மு-காஷ்மீரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நடந்து வரும் நிலையிலும், மாநில அந்தஸ்தை மத்திய அரசு இதுவரை திருப்பித்தரவில்லை. எனவே, மாநில அந்தஸ்தை திருப்பியளிப்பதோடு, மாநிலத்துக்கான அதிகாரங்களையும் திரும்ப வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வணிக பயன்பாடு சிலிண்டர் விநியோகம் 10 நாட்களில் சீரடையும்!

**புதுடெல்லி, மார்ச் 14:**



மேற்காசியாவில் கடந்த 12 நாட்களாக நடந்து வரும் கடுமையான மோதல் போக்கு தொடர்ச்சியாக பல்வேறு நாடுகளிலும் அத்தியாவசிய உபயோகத்திற்கான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இந்தியாவில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.60 மற்றும் வர்த்தக கியாஸ் சிலிண்டர் விலை ரூ.118 என அதிரடியாக உயர்ந்து மக்களை அதிர்ச்சியடைய வைத்தது.

சில இடங்களில் வணிக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில், இந்தியாவில் வீட்டு உபயோகத்திற்கான கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு எதுவும் இல்லை என மத்திய பெட்ரோலிய துறை மந்திரி ஹர்தீப் சிங் பூரி 2 நாட்களுக்கு முன்பு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், நாம் பல்வேறு வழிகளில் மற்றும் வெவ்வேறு இடங்களில் இருந்து இந்தியாவுக்கான எரிபொருள் இறக்குமதி செய்வது தொடர்ந்து நடந்து வருகின்றது. இந்தியாவில் சி.என்.ஜி. மற்றும் பி..என்.ஜி. ஆகிய வீட்டு உபயோகத்திற்கான கியாஸ் சிலிண்டர் வினியோகம் முழுமையாக பாதுகாக்கப்பட்டு உள்ளது.

அதனால், பயப்பட வேண்டிய தேவையில்லை என கூறினார். போர் சூழலிலும், ஆலைகளுக்கான 70 முதல் 80 சதவீத எரிபொருள் வினியோகம் இருக்கும் என அவர் கூறினார். எனினும், சிலிண்டர் பற்றாக்குறையால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெருமளவிலான ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகளை மூடக்கூடிய அபாய சூழல் காணப்படுகிறது. லட்சக்கணக்கானோர் வேலையிழப்பை சந்திக்க கூடும் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.

இந்த நிலையில், இந்தியாவின் எரிபொருள் நிலை பற்றி மத்திய பெட்ரோலிய துறை மந்திரி ஹர்தீப் சிங் மக்களவையில் இன்று விளக்கம் அளித்து பேசினார். அவர் கூறும்போது, வீட்டு உபயோக எரிவாயு

# பெங்களூரு ஓட்டல்களில் ரூ.100 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிப்பு

**பெங்களூரு, மார்ச் 14:**

4-வது நாளாக நேற்றும் பெங்களூரு உள்பட மாநிலம் முழுவதும் கியாஸ் தட்டுப்பாடு நிலவியது. நேற்று ஒரே நாளில் 25 சதவீத ஓட்டல்கள் மூடப்பட்டதாக கூறப்படுகிறது. இதுவரை சுமார் 65 சதவீத ஓட்டல்கள் மூடப்பட்டு உள்ளன.


போதிய இட வசதி உள்ள ஓட்டல்கள் விறகு அடுப்புகளில் உணவுகளை தயார் செய்து விற்பனை செய்து வருகின்றன. அடுத்த சில நாட்களில் கியாஸ் வினியோகம் சீராகாவிட்டால் தற்போது இயங்கும் சில ஓட்டல்களும் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பெங்களூரு மட்டுமின்றி, மைசூரு, மங்களூரு, உப்பள்ளி, பெலகாவி, விஜயாப்புரா, சிக்கமகளூரு, மண்டியா, ஹாசன், துமகூரு, சித்ரதுர்கா, உடுப்பி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. ஓட்டல்கள், உணவகங்கள் மூடப்பட்டு வருவதால், வெளியூர்களில் இருந்து வந்து தங்கி தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர், மாணவர்கள் என லட்சக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுகுறித்து பெங்களூரு ஓட்டல் உரிமையாளர்கள் சங்க கவுரவ தலைவர் பி.சி.ராவ் கூறுகையில், "எங்களுக்கு சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகத்தை முற்றிலும் நிறுத்திவிட்டனர். இருப்பினும் நாங்கள் இருப்பு உள்ள சிலிண்டர்களை வைத்து குறைந்த அளவு உணவுகளை தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம்.

வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பது எங்களின் எண்ணம். கியாஸ் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. 4 நாட்களில் ரூ.100 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டு உள்ளது. ஓட்டலை நம்பியுள்ள பல தொழிலாளர்களும் வேலை இழப்பை சந்தித்து வருகின்றனர். இந்த விவாகரத்தில் மத்திய, மாநில அரசுகள் விரைவாக தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தார்.

# தமிழகம், புதுச்சேரி, கேரளம் உள்பட 5 மாநில தேர்தல் தேதி மார்ச் 16–இல் அறிவிப்பு?

**புதுடெல்லி, மார்ச் 14:**



தமிழகம், கேரளம் உள்ளிட்ட நான்கு மாநில சட்டப்பேரவை மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைக்கு மார்ச் 15 அல்லது 16-ஆம் தேதி தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொல்கத்தாவில் பாஜகவின் ‘பரிவர்த்தன் யாத்திரை’யின் நிறைவுப் பொதுக்கூட்டம் மார்ச் 14-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றுப் பேசுகிறார்.

அதற்கு மறுநாள் அல்லது அதற்கு அடுத்த நாளில், அதாவது மார்ச் 15 அல்லது 16-ஆம் தேதி மேற்கு வங்கம், தமிழகம், கேரளம், புதுச்சேரி, கோவா ஆகியவற்றின் சட்டப்பேரவைகளுக்கு தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்க வாய்ப்புள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன. அவை மேலும் கூறியதாவது:

மேற்கு வங்க சட்டப்பேரவையின் பதவிக் காலம் மே 7, தமிழகத்துக்கு மே 10, புதுச்சேரிக்கு ஜூன் 15, அஸ்ஸாமுக்கு மே 20, கேரளத்துக்கு மே 23 ஆகிய தேதிகளில் நிறைவடைகிறது. எனவே, இவற்றுக்கு வரும் மே மாதத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்நிலையில், மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவு நடத்தும் சாத்தியம் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் தலைமைத் தேர்தல் ஆணையம் பல கட்ட ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

‘மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவை நடத்தினால், தேர்தல் தொடர்பான வன்முறைகளை கட்டுப்படுத்த உதவும்; இந்த விஷயத்தில் இறுதி முடிவெடுக்கப்படும் முன்பு, இந்தக் காரணியும் கருத்தில் கொள்ளப்படும்’ என தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

# நாடாளுமன்ற விதிகள் பொதுவானது: சபாநாயகர் ஓம் பிர்லா விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 14:**



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேச அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறி, சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் வழங்கப்பட்டது. இந்தத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

இதையடுத்து, மக்களவை நடவடிக்கைகளுக்கு ஓம் பிர்லா நேற்று தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது: நாடாளுமன்ற விதிகள் பிரதமர் உட்பட அனைவருக்கும் பொதுவானவை. எனவேதான், என்னை சபாநாயகர் பதவியில் இருந்து நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் தீர்மானம் கொண்டு வந்த நாள் முதல் நான் அவை நடவடிக்கைகளில் இருந்து விலகி இருந்தேன்.

பிரதமராக இருந்தால் கூட, அவையில் பேசுவதற்கு முன்பு சபாநாயகரிடம் அனுமதி பெற வேண்டும். அவையின் கண்ணியத்தை அனைத்துத் தரப்பினரும் காக்க வேண்டும். அவையை நடத்த பயன்படுத்தும் விதிகள் பாரம்பரியமாகப் பின்பற்றப்படுபவைதான். எனது கடமைகளை எப்போதும் நடுநிலையான, நேர்மையான முறையில் நிறைவேற்றுவேன் என்று உறுதி அளிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மேற்கு வங்க கலாசாரம் வித்தியாசமானது: கவர்னர் ஆர்.என்.ரவியிடம் சொன்ன மம்தா பானர்ஜி

**கொல்கத்தா, மார்ச் 14:**

தமிழ்நாட்டில் கடந்த 2021 முதல் கவர்னராக இருந்தவர் ஆர்.என். ரவி. அவர் தற்போது தமிழகத்தில் இருந்து மாற்றப்பட்டு, மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்திற்கு கேரள ஆளுநராக இருக்கும் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு தமிழ்நாடு கூடுதல் ஆளுநர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.மேற்கு வங்காள கவர்னராக ஆர்.என். ரவி நேற்று பதவியேற்றார். அவருக்கு கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்பு நிகழ்ச்சியில் மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜியும் கலந்து கொண்டார்.

அப்போது கவர்னர் ஆர்.என். ரவியிடம் பேசிய மம்தா பானர்ஜி, “மேற்கு வங்காளம் சிறப்பாக இருக்கும். மேற்கு வங்காள கலாசாரம் வித்தியாசமானது. வங்காளத்தை யாருக்கு பிடிக்குமோ அவர்களைத்தான் மேற்கு வங்காள மக்களுக்கு பிடிக்கும்” என்று கூறினார்.

தமிழக கவர்னராக ஆர்.என். ரவி இருந்த போது தமிழக அரசுடன் மோதல் போக்கை கடைபிடித்து வந்தார். இந்த நிலையில், தற்போது மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளதால் மம்தா பானர்ஜியுடன் மோதல் போக்கை கையாள்வாரா? இல்லை அனுசரணையாக செல்வாரா? என்ற கேள்வி அந்த மாநில அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது. மேற்கு வங்காளத்தில் இன்னும் சில வாரங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒரு தலைப்பட்சமாக மாறிக் கொண்டிருக்கும் இந்திய வெளியுறவுக் கொள்கை: ப.சிதம்பரம்

**புதுடெல்லி, மார்ச் 14:**



வளைகுடா நாடுகள் மீதான ஈரானின் தாக்குதலைக் கண்டித்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானத்தை இந்தியா முன்மொழிந்துள்ள நிலையில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வளவு ஒருதலைப்பட்சமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னுமொரு சான்று என தெரிவித்துள்ள ப.சிதம்பரம், எதுவிவேகம்? எது ராஜதந்திரம்? எது சாய்மானம் இல்லாத வெளியுறவுக் கொள்கை? என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ’எக்ஸ்’ பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வளவு ஒரு தலைப்பட்சமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னுமொரு சான்று.

ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் ஈரான் நாட்டைக் கண்டனம் செய்து கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா முன்மொழிந்தது.

ஆனால் ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்து நடத்தும் போரையும் 1300 ஈரான் மக்கள் கொல்லப்பட்டதையும் 168 குழந்தைகள் மரணித்ததையும் கண்டித்து ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா மற்றும் 12 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரஷியாவும் சீனாவும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கவில்லை. எது விவேகம்? எது ராஜதந்திரம்? எது சாய்மானம் இல்லாத வெளியுறவுக் கொள்கை? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# எல்பிஜி தட்டுப்பாடு: திருப்பதியில் லட்டு தயாரிப்பு பாதிப்பா?

**திருமலை, மார்ச் 14:**

நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு உள்ள நிலையில் திருமலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் லட்டு தயாரிப்பதில் சிக்கல் ஏற்படுமா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் நடத்தி வரும் தாக்குதல் 13-ஆவது நாளைக் கடந்திருக்கும் நிலையில், உலக அளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வந்துள்ளது. ஏற்கெனவே பெங்களூர், மும்பை உள்ளிட்ட இடங்களில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உணவகங்கள் மூடப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு மட்டுமின்றி அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல் கூட பற்றாக்குறை நிலவும் போக்கு ஏற்பட்டுள்ளது. அந்தவகையில், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் லட்டு தயாரிப்பு மற்றும் அன்னதாணத்திற்கு எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வந்த தகவலையடுத்து தேவஸ்தான அதிகாரி ஒருவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தேவஸ்தான அதிகாரி கூறுகையில்,திருமலையில் நாள்தோறும் சராசரியாக நான்கு லட்சம் லட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. அதே நேரத்தில், திருவிழா காலங்களில் இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 10 லட்சமாக உயரும்.

திருமலையில் லட்டு தயாரிப்பு மற்றும் அன்னதானக் கூடத்துக்கு மொத்த சமையல் எரிவாயு தேவை நாளொன்றுக்கு 10 டன்களுக்கு மேல் தேவைப்படுகிறது.

அந்தவகையில் திருமலையில் சமையல் எரிவாயு விநியோகத்தில் எந்தவித பற்றாக்குறையும், இடையூறும் இதுவரை இல்லை. பக்தர்கள் வழக்கம்போல் எந்த கட்டுப்பாடுகளும் இல்லாமல் லட்டுகளை வாங்கிச் செல்கின்றனர். ஏழுமலையான் பிரசாதமாக வழங்கப்படும் சிறிய லட்டு முதல் பக்தர்கள் வாங்கிச் செல்லும் லட்டு, அன்ன பிரசாதங்கள் தடையின்றி தயாரிக்க உறுதி செய்வதற்காக, கோயில் நிர்வாகம் அடுத்த ஒரு வாரத்திற்கு போதுமான சமையல் எரிவாயுவைப் பராமரித்து வருவதாக அதிகாரி கூறினார்.

லட்டு விநியோகத்தில் முன்னுரிமை முதலில் திருமலைக்கு வழங்கப்பட்டு, பின்னர் தேவஸ்தான தகவல் மையங்கள் மற்றும் முக்கியமான கோயில்களுக்கு வழங்கப்படுகிறது. இதேபோல், திருப்பதி லட்டு தயாரிப்பு மற்றும் பிரதான அன்னதான மையத்திற்குக் குழாய் மூலம் எரிவாயு விநியோகத்தைப் பயன்படுத்துகிறது, அதே நேரத்தில் சிலிண்டர்கள் மற்ற அன்னதான அலகுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

நாளொன்றுக்குச் சராசரியாகப் பிரதான அன்னதான மையத்தில் கிட்டத்தட்ட 75,000 பேருக்கு உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் சுமார் 2.25 லட்சம் உணவுகள் அனைத்து மையங்களிலும் வழங்கப்படுகின்றன.

# 22 பெண்களோடு திருமணம்... மனைவிகளை திருப்திபடுத்த திருட்டு: திகைக்க வைத்த பலே ஆசாமி



**திருவனந்தபுரம், மார்ச் 14:**

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே ஆற்றிங்கல் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு மூதாட்டியின் கழுத்தில் கிடந்த 7 பவுன் தங்க சங்கிலியை மர்ம ஆசாமி பறித்துச் சென்றார். இதுகுறித்த புகாரின் பேரில் ஆற்றிங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணையில், திருவனந்தபுரம் வட்டியூர்க்காவு பகுதியை சேர்ந்த பாகுலேயன் (வயது 56) என்பவர் நகை பறிப்பில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை தேடி வந்தனர். போலீசார் தேடுவதை அறிந்த பாகுலேயன் தலைமறைவானார். இந்த நிலையில் நெய்யாற்றின்கரை பகுதியில் வைத்து அவரை மடக்கி பிடித்து போலீசார் கைது செய்தனர். பின்னர் போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர். அப்போது மனைவியை திருப்திபடுத்த நகை பறிப்பில் ஈடுபட்டது அம்பலமானது. ஒரு மனைவியா? என போலீசார் கேட்க அவர் அளித்த பதில் போலீசாரை திகைக்க வைத்தது. மாவட்டம்தோறும் மனைவிகள் இருப்பதாக கூறி தம்பட்டம் அடித்துள்ளார். அதாவது பாகுலேயன் கணவனை இழந்தவர்கள், விவாகரத்து செய்த பெண்களை குறிவைத்து அவர்களை ஏமாற்றி திருமணம் செய்து வந்துள்ளார். இவ்வாறு திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரை மொத்தம் 22 பெண்களை ஏமாற்றி மணமுடித்துள்ளார்.

ஒவ்வொரு ஊருக்கு செல்லும் போதும் தனது பெயரை மாற்றி மாற்றி கூறி லீலைகளை அரங்கேற்றி வந்துள்ளார். அதன்படி இவருக்கு தாஸ், பாபு, என பல பெயர்கள் உள்ளன. மேலும் தனது மனைவிகளை திருப்திபடுத்தவும். அவர்களுக்கு விதவிதமாக நகைகளை அணிவித்து அழகு பார்க்கவும் திருட்டு மற்றும் வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளார். பாகுலேயன் மீது கேரளாவில் 50-க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகள் உள்ளன என்பன போன்ற தகவல்கள் போலீஸ் விசாரணை மூலம் அம்பலமானது.

# “ரஷ்யாவிடம் நாம் எண்ணெய் வாங்க அமெரிக்க அனுமதி ஏன் தேவை?”- மக்களவையில் ராகுல் கேள்வி

**புதுடெல்லி, மார்ச் 14:**



“ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்க நமக்கு அமெரிக்காவின் அனுமதி ஏன் தேவை? நாம் எந்த நாட்டில் எரிபொருள் வாங்க வேண்டும் என்பதை மற்றொரு நாடு ஏன் முடிவுசெய்ய வேண்டும்?” என மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார்.

ஈரான் போரால் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு குறித்து மக்களவையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசும்போது, “ஈரான் போரால் எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எரிவாயு தட்டுப்பாட்டால் உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்க நமக்கு அமெரிக்காவின் அனுமதி ஏன் தேவை? நாம் எந்த நாட்டில் எரிபொருள் வாங்க வேண்டும் என்பதை மற்றொரு நாடு ஏன் முடிவு செய்ய வேண்டும்? இது குறித்த புதிரை நான் கண்டுபிடித்துவிட்டேன், அவர்கள் இதில் சமரசம் செய்துகொண்டுள்ளனர்” என்றார். மக்களவையில் ராகுல் காந்தி பேசும்போது மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரியைச் சுட்டிக்காட்டி, பாலியல் குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீனின் நண்பர் என்று புரி கூறியதாகவும், புரியின் மகள் கோடீஸ்வரர் ஜார்ஜ் சோரோஸிடமிருந்து பணம் பெற்றதாகக் கூறும் ஒரு காகித ஆவணத்தையும் காட்டினார்.

மக்களவையில் எப்ஸ்டீன் விவகாரத்தை முன்வைத்து ராகுல் காந்தி பேசியதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து, “விவாதப்பொருள் குறித்து மட்டுமே பேச வேண்டும், மற்ற விஷயங்கள் குறித்துபேச வேண்டாம்” என மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அறிவுறுத்தினார்.




## விளாத்திகுளம் அருகே சிறுமி துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்படவில்லை - காவல்துறை



**தூத்துக்குடி, மார்ச்.14:** தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, துண்டு துண்டாக வெட்டப்பட்ட சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர். மேலும் சம்பந்தப்பட்டோரை கைதுசெய்யக்கோரி பெற்றோர் மற்றும் உறவினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே இச்சம்பவத்திற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் சிறுமி துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்யப்படவில்லை என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் இருந்து சிறுமியின் சடலம் முழுமையாக மீட்கப்பட்டது என போலீசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் உடற்கூராய்வு அறிக்கை, தடய அறிவியல் விசாரணை அறிக்கைக்கு பின்பே பாலியல் குற்றம் நிகழந்ததா என தெரியும் என்றும், உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிட்டு குழப்பம், அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் சிறுமியின் புகைப்படம் மற்றும் பெயரை சமூக வலைதளங்களில் வெளியிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.

## நெல்லையில் 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை




**திருநெல்வேலி, மார்ச்.14:** நெல்லையில் மூன்று சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட வழக்கில் ஒருவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு கூறியுள்ளது.

திருநெல்வேலி மேலப்பாளையத்தில் 2023-ம் ஆண்டு 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பாக பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து ஆனந்த சேகர் என்பவரை கைது செய்திருந்தனர். இந்த வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட போக்ஸோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட ஆனந்த சேகருக்கு மரண தண்டனை விதித்து இன்று தீர்ப்பு வழங்கியது. மேலும், பாதிக்கப்பட்ட 3 சிறுமிகளுக்கும் தலா ரூ.7 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புராஜெக்ட் செய்ய வந்த இடத்தில் மாணவிக்கு பாலியல் வன்கொடுமையா? விசாரணையில் அம்பலமான உண்மை



**திருச்சி, மார்ச்.14:** திருச்சியில் இருந்து சென்னைக்கு புராஜெக்ட் செய்ய வந்திருந்த கல்லூரி மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வெளியான செய்தி பொய் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க மாணவி ஒருவர், தனது படிப்பு தொடர்பான 'புராஜெக்ட் பணிக்காக சென்னை வந்தபோது மர்ம நபர்களால் மிரட்டப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாக அபிராம்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

அவரது புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த தொடங்கினர். இந்நிலையில் இந்த புகார் என பொய்யானது என போலீசார் தெரிவித்துள்ளனர்.

படிப்பில் சரியாக கவனம் செலுத்த முடியாத காரணத்தால், மன உளைச்சலில் இருந்த மாணவி இவ்வாறு புகார் அளித்ததாக தெரிவித்துள்ளனர். சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி விசாரணை நடத்திய போது அப்படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பது தெரியவந்துள்ளது.

## தமிழகத்தில் பெட்ரோல், டீசல் போதுமான அளவு கையிருப்பு உள்ளது: இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவிப்பு




**சென்னை, மார்ச்.14:** தமிழ்நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கையிருப்பு இருப்பதாகவும், பெட்ரோல் நிலையங்களுக்கு விநியோகம் வழக்கம்போல சீராக நடைபெற்று வருவதாகவும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் உறுதி அளித்துள்ளது.

இதுகுறித்து இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தரப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தமிழ்நாட்டில் உள்ள இந்தியன் ஆயிலின் அனைத்து பெட்ரோலிய முனையங்களும் மற்றும் விநியோக மையங்களும், வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான அளவில் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்புடன் உள்ளன.

சில இடங்களில் அச்சத்தில் அதிக அளவில் எரிபொருள் வாங்கும் நிலை ஏற்பட்டதால், சில பெட்ரோல் நிலையங்களில் தற்காலிகமாக விநியோகத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறை எதுவும் இல்லை என்றும், திடீர் தேவையால் ஏற்பட்ட இந்த நிலையை சமாளிக்க பாதிக்கப்பட்ட பெட்ரோல் நிலையங்களுக்கு முன்னுரிமையுடன் விநியோகம் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்தியன் ஆயில் தெரிவித்துள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள பெட்ரோல் நிலையங்களின் இருப்பு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, எரிபொருள் கிடைப்பதை வழக்கமான நிலைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அச்சத்தில் அதிகமாக வாங்குதல் அல்லது தேவையற்ற முறையில் எரிபொருளை சேமித்து வைப்பதை பொதுமக்கள் தவிர்க்குமாறு இந்திய ஆயில் கேட்டுக் கொள்கிறது, ஏனெனில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கிடைக்கின்றன மற்றும் விநியோகச் சங்கிலி சீராக செயல்பட்டு வருகிறது.

மேலும், பிளாஸ்டிக் கேன்கள், பாட்டில்கள் அல்லது அனுமதி பெறாத பாத்திரங்களில் பெட்ரோலை சேமித்து வைப்பது போன்ற பாதுகாப்பற்ற செயல்களை பொதுமக்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று இந்தியன் ஆயில் வலியுறுத்துகிறது. இது கடுமையான பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்தக்கூடும்.

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பையும் எரிபொருள் தடையில்லா கிடைப்பையும் உறுதி செய்வதில் இந்தியன் ஆயில் தொடர்ந்து உறுதியாக செயல்பட்டு வருகிறது, மேலும் தமிழ்நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் தடையின்றி தொடர்ந்து கிடைக்கும் என்பதை மீண்டும் உறுதி செய்கிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் எண்ணெய்தொழில்துறைக்கான மாநில ஒருங்கிணைப்பாளர் எம். அண்ணாதுரை தெரிவித்ததாவது: மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு துறை பெட்ரோலிய முனையங்களிலும் (IOC, BPC & HPC) போதுமான அளவில் எரிபொருள் இருப்பு உள்ளது. மேலும், சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து எரிபொருள் விநியோகம் வழக்கம்போல நடைபெற்று வருகிறது; தொடர்ந்து தடையில்லா விநியோகத்தை உறுதி செய்ய உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. என்று கூறினார்.

## மானாமதுரை ஆகாஷ் மரண வழக்கை 60 நாளில் முடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



**மதுரை, மார்ச்.14:** மானாமதுரை ஆகாஷ் மரண வழக்கு விசாரணையை 60 நாட்களில் முடிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சீயோன்நகரில் சாலையில் நடந்து சென்றவர்களை அரிவாளால் வெட்டியதாக கைது செய்யப்பட்ட ஆகாஷ் என்பவர், காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இது தொடர்பாக சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், போலீஸார் தாக்கியதால் ஆகாஷ் உயிரிழந்ததாக கூறி போலீஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யக் கோரி ஆகாஷ் உடலை வாங்காமல் அவரது உறவினர்கள் மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆகாஷின் தந்தை இழப்பீடு கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, ஆகாஷ் மரணம் தொடர்பாக சிபிசிஐடி பதிவு செய்துள்ள வழக்கில், எஸ்சி, எஸ்சி தடுப்பு சட்டப்பிரிவை சேர்க்கவும், மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தி வருபவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வழக்கறிஞர்கள் கு.சாமிதுரை தலைமையில் வழக்கறிஞர்கள் ஆணையர்கள் குழு அமைத்தும் நீதிபதி உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவையடுத்து வழக்கறிஞர்கள் ஆணையர்கள் ஆகாஷின் உறவினர்களை நேரில் சந்தித்து போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டனர். இருப்பினும் போலீஸார் மீது கொலை வழக்கு பதிவு செய்யும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என மறுத்துவிட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு எதிராக கிராம மக்கள் சார்பில் நான்கு வழிச்சாலையில் இன்னொரு பகுதியில் திடீர் போராட்டம் நடத்தப்பட்டது. அவர்களை வழக்கறிஞர்கள் ஆணையர்கள் சமரசம் செய்தனர்.

இந்நிலையில், ஆகாஷ் வழக்கு நீதிபதி எல்.விக்டோரியா கௌரி முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், 'உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் போராட்டத்தை கைவிடாமல் தொடர்கின்றனர். நான்கு வழிச்சாலையின் மத்தியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்' என்று கூறி போராட்டம் தொடர்பான வீடியோ பதிவு தாக்கல் செய்யப்பட்டது.

அப்போது நீதிபதி, 'தேசிய நெடுஞ்சாலையை விட்டு வேறு இடத்திற்கு சென்று போராட்டத்தைத்தொடரலாம் என அறிவுறுத்திய பிறகும் இடத்தை காலி செய்யாமல் இருப்பது ஏன்? முதல் தகவல் அறிக்கையில் வன்கொடுமை சட்டம் சேர்க்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகும் போராட்டத்தை தொடர்வது ஏன்?' என கேள்வி எழுப்பினார்.

அரசுத் தரப்பில், 'குறிப்பிட்ட சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், பிற சமூகத்தினர் சிரமத்திற்கு ஆளாகுவதாக கருதுவதால் பிரச்சினை எழும் சூழல் உள்ளது' எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதி, 'கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும், பொதுமக்களை சிரமத்திற்கு ஆளாக்கும் வகையில் போராட்டத்தை கைவிடாமல் தொடர்பவது சரியானது அல்ல. மானாமதுரை பழைய பேருந்து நிலையம் அருகே சென்று போராட்டத்தைத்தொடரலாம். போராட்டக்காரர்கள் தேசிய நெடுஞ்சாலையை காலி செய்ய வேண்டும். தவறினால் அவர்களை அகற்ற போலீஸார் நடவடிக்கை எடுக்கலாம்' என்றார்.

அரசுத் தரப்பில், 'நிபுணர் குழுவின் உடற்கூராய்வு அறிக்கை தொடர்பாக மனுதாரர் தெரிவிக்கும் ஆட்சேபனை ஏற்கும்படியாக இல்லை' எனக் கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், 'உடற்கூராய்வு விதிகள் முறையாக பின்பற்றப்படவில்லை. அதற்காக மறு உடற்கூராய்வு செய்ய கோரவில்லை. வழக்கு விசாரணையை விரைவில் முடிக்க உத்தரவிட வேண்டும்' எனக் கூறப்பட்டது.

இதையடுத்து, விசாரணையை 60 நாட்களில் முடிக்க வேண்டும் என்று கூறி விசாரணை நீதிபதி ஒத்திவைத்தார்.

## தமிழகத்தில் குற்றச் சம்பவங்கள் மிகைப்படுத்தப்படுகிறது: உள்துறை செயலர், டிஜிபி தகவல்




**சென்னை, மார்ச்.14:** தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றச் செயல்கள் வெகுவாக குறைந்துள்ள நிலையில், குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதுபோல் மிகைப்படுத்தப்படுவதாக உள்துறை செயலர், டிஜிபி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, உள்துறை செயலர் தீரஜ் குமார், சட்டம் - ஒழுங்கு பொறுப்பு டிஜிபி வெங்கடராமன் ஆகியோர் நேற்று கூட்டாக செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்பட அனைத்து வகையான குற்றச் செயல்களும் பெருமளவு குறைந்துள்ளன. 2021-ல் 1,597 கொலை வழக்குகள் பதிவான நிலையில் 2025-ல் 1,461 ஆக குறைந்துள்ளது. இந்த இடைப்பட்ட ஆண்டுகளிலும் குறைந்துள்ளது. அதேபோல், இந்த ஆண்டிலும் குற்றங்கள் குறைந்துள்ளன. ஆனால், குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதுபோல் மிகைப்படுத்தப்படுகிறது.

பொது நிகழ்ச்சிகள், கோயில் திருவிழாக்களில் கூட அசம்பாவிதம் ஏற்படாமல் தடுத்துள்ளோம். காவல்துறையைப் பொறுத்தவரை சிறிய குற்றங்களாக இருந்தாலும், பெரிய குற்றங்களாக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

போக்சோ சட்டம் தொடர்பாக தற்போது பெருமளவு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் தானாக முன்வந்து புகார் அளிக்கின்றனர். இதனால், புகார்களின் எண்ணிக்கை அதிகமாகத் தெரிகிறது.

2021-ம் ஆண்டில் 6,800 போதைப் பொருள் வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், 2024-ம் ஆண்டில் 11 ஆயிரம் வழக்குகளாக அதிகரித்துள்ளன. போதைப் பொருள் தடுப்பு பணிகளை காவல்துறையினர் தீவிரப்படுத்தியதாலேயே இந்த வழக்குகள் அதிகரித்துள்ளன.

சிவகங்கையில் நடைபெற்ற ஆகாஷ் காவல் நிலைய மரணம் தொடர்பாக விசாரித்து வருகிறோம். காவல் நிலைய மரணங்களை ஒரு போதும் சகித்துக் கொள்ள முடியாது. அதில், தொடர்புடைய காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாலியல் வழக்கில் உடனடி விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னிலையில் உள்ளது.

நிரந்தர டிஜிபி விவகாரத்தில் தகுதியுள்ள போலீஸ் அதிகாரிகளின் பட்டியல் யுபிஎஸ்சி-க்கு ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் நிரந்தர டிஜிபி நியமிக்கப்படுவார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபி மகேஷ்வர் தயாள், சென்னை காவல் ஆணையர் அருண் ஆகியோர் உடனிருந்தனர்.

## வண்டலூர் பூங்காவில் 11 நாள் சபாரி சேவைகள் ரத்து: காரணம் இதுதான்



**சென்னை, மார்ச்.14:** சென்னை வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா உள்ளது. இங்கு சிங்கம், புலி, கரடி, யானை, மான்கள் உள்ளிட்ட பல அரிய வகை விலங்குகளும், ஏராளமான பறவைகளும் உள்ளன.

இதனை காண தினந்தோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வந்து கண்டு களித்துவிட்டு செல்வது வழக்கம்.

இந்நிலையில், பராமரிப்பு பணிகளுக்காக வண்டலூர் உயிரியல் பூங்காவில் வரும் 18ம் தேதி முதல் 28ம் தேதி வரை 11 நாள் என்று சபாரி சேவைகள் ரத்து செய்யப்படுவதாக பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, பூங்கா நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் அவசர பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காகவும், பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் சிங்கம் மற்றும் மான் சபாரி சேவை மார்ச் 18ம் தேதி முதல் 28ம் தேதி வரை ரத்து செஊ அப்படுகிறது என தெரிவித்துள்ளது.

## தமிழகத்தில் மார்ச் 18-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு




**சென்னை, மார்ச்.14:** தமிழகத்தில் நாளை முதல் மார்ச் 18-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மார்ச் 13) முதல் 16-ம் தேதி வரை தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 17, 18 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 15-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட ஓரிரு இடங்களில் 3 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 4 செமீ, கொடுமுடியாறு அணை, நாலுமுக்கு, காக்காச்சி, மாஞ்சோலை இடங்களில் தலா 3 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தி.மு.க. கூட்டணிக்கு புரட்சி அ.தி.மு.க. ஆதரவு: புகழேந்தி அறிவிப்பு



**சென்னை, மார்ச் 14:** சசிகலாவின் தீவிர ஆதரவாளராக இருந்தவர் பெங்களூரு புகழேந்தி. அவர் சிறைக்கு சென்ற பிறகு டி.டி.வி. தினகரன் அணிக்கு சென்றார். அ.ம.மு.க.-வில் கர்நாடக மாநிலச் செயலாளராகவும் இருந்தார்.

பின்னர் டி.டி.வி. தினகரனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அதிலிருந்து விலகி ஓ.பி.எஸ். அணியில் இணைந்தார். சமீபத்தில் ஓ.பி.எஸ். திமுகவில் இணைந்ததை விமர்சித்த புகழேந்தி புரட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுதிமுக தலைவர் மு.க. ஸ்டாலினை சந்தித்தார். அதன்பின் தமிழக சட்டசபை தேர்தலில் புரட்சி அதிமுக திமுக கூட்டணிக்கு ஆதரவு அளிக்கும் என புகழேந்தி தெரிவித்தார். அத்துடன் திமுக கூட்டணியை ஆதரித்து பரப்புரையில் ஈடுபட உள்ளதாகவும் தெரிவித்தார்.

# திமுக கூட்டணியில் ஈஸ்வரன் கூட்டணிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு



**சென்னை, மார்ச் 14:** தி.மு.க. கூட்டணியில் தொகுதிபங்கீடுபேச்சுவார்த்தை நடைபெற்று ஒவ்வொரு கட்சிகளுக்கும் இடங்களை ஒதுக்கீடு வருகிறது திமுக.

**உதயசூரியன் சின்னத்தில்**

அந்த வகையில் ஈஸ்வரனின் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு திமுக இரண்டு தொகுதிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது. இரண்டு தொகுதிகளிலும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடம்.

**காங்கிரஸ்க்கு 28**

திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 28 இடங்களும், மதிமுக-வுக்கு 4 இடங்களும், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் மனிதநேய மக்கள் கட்சி ஆகியவற்றிற்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏப்ரல் மாதம் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற இருக்கிறது.

# ஆந்திராவில் கலப்பட பால் குடித்து 13 பேர் பலி!



**கோதாவரி, மார்ச் 14:** ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கலப்படப் பால் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 11 பேர் தீவிர சிகிச்சையில் உள்ளனர். கடந்த பிப்.16ம் தேதி அப்பகுதியில் உள்ள முதியவர்களுக்கு சிறுநீர் கழிப்பதில் சிரமம், வாந்தி, வயிற்று வலி மற்றும் கடுமையான சிறுநீரக செயலிழப்பு போன்ற அறிகுறிகள் எழுந்துள்ளன. இதனைத்தொடர்ந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒவ்வொருவராகஇறந்துள்ளனர்.

பிப்.22 அன்று முதல் உயிரிழப்பு நடந்துள்ளது. 76 வயதான தாடி கிருஷ்ணவேணி என்ற பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனைத்தொடர்ந்து அவரது மகன் அளித்த புகாரைத் தொடர்ந்து ராஜமுந்திரி 3 டவுன் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் பாதிக்கப்பட்டவர்களின் இரத்த மாதிரிகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட பால் மற்றும் தயிர் ஆகியவை தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

விசாரணையில் எத்திலீன் கிளைக்கால் (Ethylene Glycol) எனும் நச்சு இரசாயனம் கலந்த பாலை குடித்ததால் பாதிப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. இதனைத்தொடர்ந்து இந்தப் பாலை இவர்களுக்கு விநியோகித்த கணேஸ்வர ராவ் என்பவரை போலீசார் கைது செய்தனர்.


# கவியருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை- வனத்துறை அறிவிப்பு

**பொள்ளாச்சி, மார்ச் 14:** கோவை மாவட்டம் பொள்ளாச்சி-வால்பாறை சாலையில் ஆழியார் அடுத்து கவியருவி (குரங்கு நீர்வீழ்ச்சி) உள்ளது.

கோவை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் ஒன்றாக இது விளங்குகிறது.

இங்கு வார விடுமுறை நாட்களான சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதும். கோவை மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் இங்கு வருவார்கள்.

அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் கவியருவியில் தங்கள் குடும்பத்தினருடன் குளித்து மகிழ்ந்து செல்வது வழக்கம். குறிப்பாக வால்பாறைக்கு சுற்றுலா செல்லக்கூடியவர்கள் கீழே உள்ள ஆழியார் அணை, கவியருவியில் குளித்து விட்டே மலைப்பகுதியான வால்பாறைக்கு செல்கிறார்கள்.



இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழைப்பொழிவு இல்லாததால் வறட்சி நிலவுகிறது.

கவியருவிக்கும் தண்ணீர் வரத்து குறைந்து விட்டது. தண்ணீர் குறைந்தாலும் சுற்றுலா பயணிகள் காத்திருந்து குளித்து சென்றனர்.

இந்த நிலையில் தண்ணீர் வரத்து குறைவு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் இன்று முதல் ஆழியார் கவியருவி தற்காலிகமாக மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

தற்போது கவியருவியில் தண்ணீர் வரத்து முற்றிலும் குறைந்து பாறை மட்டுமே தெரிகிறது. இதனால் இன்று முதல் சுற்றுலா பயணிகள் அருவிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அருவியில் உடைந்து காணப்படும் தடுப்பு கம்பிகள், மரக்கட்டைகளை அகற்றி விட்டு, புதிதாக கம்பி அமைக்கப்படும். மீண்டும் மழை பெய்து நீர்வரத்து தொடங்கியவுடன் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# இளைஞர்களே... உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல! - மு.க.ஸ்டாலின்



**சென்னை, மார்ச் 14:** முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தாய்த்தமிழைக் காக்க எந்தத் தியாகத்துக்கும் ஆயத்தமாக இருக்கும் இளைஞர்களே... உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல!

இந்தித் திணிப்புக்கு எதிராக மே 17 இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தில், யாரும் எதிர்பாராத நிலையில் உணர்ச்சிப் பெருக்கால் ரெயில் முன் பாய்ந்து, பலத்த காயங்களுடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சகோதரர் சிவா திலீபன் அவர்களையும், உடனிருக்கும் மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் சகோதரர் திருமுருகன் காந்தி அவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினேன்.

அப்போது, தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் சகோதரர் சிவா திலீபன் நலம்பெற வேண்டும் எண்ணமும், "பிள்ளைகளைப்பலிகொடுக்கவா இயக்கம் நடத்துகிறோம்" என்று மொழிப்போரின்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதும் ஒருசேர என்னுள் எழுந்தது.

இருந்து போராட வேண்டும்; அதன் பயனை நாம் இருந்து காண வேண்டும்!

தமிழ்நாட்டைச் சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அரசியல் களத்தில் ஒற்றுமையுடன் முறியடிப்போம். உணர்ச்சிகள் நம் அறிவாற்றலை ஆட்கொள்ள விடாமல், சிந்தித்துச் செயல்படுவோம்!

எனவே, நமது போராட்ட நோக்கம் சரியானதாக இருந்தாலும், உணர்ச்சிவயப்பட்டு இதுபோன்ற செயல்களை யாரும் செய்யக் கூடாது என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சகோதரர் சிவா திலீபன் அவர்கள் நலம் பெற்றுத் திரும்ப அனைத்துச் சிறப்பு கவனிப்புகளையும் செய்ய மருத்துவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# என்.டி.ஏ. கூட்டணிக்கு செல்லும் த.வெ.க.? 98 மாவட்ட செயலாளர்கள் ஆதரவு



**சென்னை, மார்ச் 14:** கடந்த 2024ஆம் ஆண்டு நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் எனும் புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். அவர் கட்சித் தொடங்கிய அடுத்த இரண்டு மாதங்களிலேயே இடைத்தேர்தல் வந்தது. ஆனால் தவெக அத்தேர்தலில் போட்டி யிட வில்லை. தொடர்ந்து நடந்த நாடாளுமன்ற தேர்தலிலும் போட்டியில்லை. இதனைத்தொடர்ந்து 2026 சட்டமன்ற தேர்தலே இலக்கு, தனித்தே போட்டி என கட்சியின் தலைவர் விஜய் கூறினார்.

தற்போது தமிழ்நாட்டில் தேர்தல் நெருங்கி வருகிறது. இதனையொட்டி நாளடைவில், தனித்தே போட்டி எனக் கூறியிருந்த தவெக, சில கட்சிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியாக தகவல்கள் வெளியானது. அதனை ஊர்ஜிதப்படுத்தும் விதமாகவே அக்கட்சியின் தலைவரும் ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு எனக் கூறியிருந்தார்.

இதனால் தவெக கூட்டணியோடு போட்டியிட விரும்புவது தெளிவானது. ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ்நாட்டின் பழைய கட்சிகள் எதுவும் தவெகவுடன் கூட்டணியில் இணைய ஆர்வம் காட்டவில்லை. அதிமுகவிற்கு விருப்பம் இருந்தாலும், தவெகவாக வந்து பேசவேண்டும் என எதிர்பார்த்தது. ஆனால் தவெக பக்கமோ விஜய்தான் முதலமைச்சர் வேட்பாளர் என்ற நிலைப்பாடு இருந்தது. இதனால் இருதரப்பும் எந்த பேச்சுவார்த்தையும் முன்னெடுக்கவில்லை.

இதனிடையே விஜய் திமுகவைப்போல அதிமுகவையும் விமர்சிக்க தொடங்கினார். இதனால் அந்தப் பேச்சு அப்படியே நின்றது.

மேலும் கொள்கை எதிரி எனக்கூறிய பாஜக, அதிமுக கூட்டணியில் இருப்பதாலும் இந்த பேச்சு கைவிடப்பட்டது. இச்சூழலில் கடந்த சில நாட்களாக பாஜக விஜய்யை கூட்டணியில் இணைக்க ஆர்வம் காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாக (சிபிஐ, ஜன நாயகன் விவகாரம் மூலம்) தவெக நிர்வாகி அருண்ராஜ் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தவெகவும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைவது குறித்து ஆலோசிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இன்று இதுதொடர்பாக தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் 132 மாவட்ட செயலாளர்களில் 120 பேர் பங்கேற்றதாகவும், 98 மாவட்ட செயலாளர்கள் என்டிஏ கூட்டணிக்கு செல்ல ஆதரவு தெரிவித்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.




# "மோடியையும் பழனிசாமியையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்" - அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் தாக்கு



**சென்னை, மார்ச்.14:** "விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் பழனிசாமியையும் தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்" என இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: பிரதமர் மோடி பொய்ப் பிரச்சாரங்களின் பிதாமகர். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று கூறிவிட்டு, கருப்புச் சட்டங்கள் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்தவர் மோடி. போராடியவர்கள் மீது தடியடி நடத்தினார்கள். லக்கிம்பூரில் விவசாயிகள் மீது காரை ஏற்றிப் படுகொலை செய்தார்கள்.

வேளாண் சட்டங்களை ஆதரித்த பழனிசாமி, விவசாயிகளின் துரோகி. திமுக ஆட்சியில் வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் மூலம் 5 ஆண்டுகளில் ரூ.1.94 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2 லட்சம் புதிய இலவச மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியில் 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, தற்போது 5.66 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்க விவசாயப் பொருட்களுக்கு வரிச்சலுகை அளித்து இந்திய விவசாயத்தைச் சவக்குழியில் தள்ள பிரதமர் முயல்கிறார். போதைப் பொருள் தடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. தமிழக அரசு குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் பழனிசாமியையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# "அரசியலுக்கு வரக்கூடாது என ரஜினியை திமுக குடும்பம் மிரட்டியது" - ஆதவ் அர்ஜுனா குற்றச்சாட்டு



**சென்னை, மார்ச்.14:** "அரசியலுக்கு வரக்கூடாது என ரஜினிகாந்த்தை திமுக குடும்பம் மிரட்டியது. அவரை அரசியலுக்கு வராமல் பார்த்துக் கொண்டது" என தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழகம் முழுவதும் நேற்று சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வுக்கான அரசாணையை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டையும், எங்கும் பரவலாகி வரும் போதைப் பொருட்களையும் தடுக்கத் தவறிய தமிழக அரசைக் கண்டித்தும், அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு தவெக தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை முடக்கும் வகையிலும், அதனை நீர்த்துப் போகச் செய்யும் வகையிலும், ஜனநாயகமற்ற முறையிலான வழிகாட்டு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தவெக சார்பில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுச் செயலாளர் ஆனந்த், தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது ஆதவ் அர்ஜுனா பேசியதாவது: தவெகவை பார்த்து உதயநிதி கொள்கை அற்ற கட்சி என்கிறார். நான் உங்களுடைய தொலைக்காட்சிக்கு விவாதத்துக்கு வருகிறேன். அதில் சாதிவாரி கணக்கெடுப்பு, சமூக நீதி, இருமொழி கொள்கை என்றால் என்ன என உதயநிதி என்னுடன் விவாதிக்கத் தயாரா?. அதில் நான் தோற்றுவிட்டால் அரசியலைவிட்டு போய்விடுகிறேன். இதற்கு தைரியம் இல்லை என்றால் எங்களுக்கு கொள்கை இல்லை என பேச வேண்டாம். திமுக கூட்டணியில் இருக்கும் கட்சிகள் மக்கள் பிரச்சினைகளை பேசவில்லை.

மாவட்டம் தோறும் விஜய் பிரச்சாரத்துக்கு சென்றதால் பெரும் எழுச்சி ஏற்பட்டது. இதையடுத்து செந்தில்பாலாஜியை அழைத்து ஏதாவது பிரச்சினையை பண்ணிவிட வேண்டும் என அஜெண்டா கொடுத்தார்கள். கரூரில் 10 ரூபாய் பாலாஜி என விஜய் பேசியபோதுதான் செருப்பு வீசினார்கள். எந்த மாவட்டத்திலும் இப்படி நடக்கவில்லை. நேற்று "மருத்துவமனைக்கு சென்ற அனைவரையும் அழைக்க வேண்டும். ஆனால் என்னை மட்டும் ஏன் விசாரணைக்கு அழைக்கிறார்கள் என தெரியவில்லை" என செந்தில்பாலாஜி பேட்டி கொடுக்கிறார். ஏனெனில் நீங்கள்தான் முதல் குற்றவாளி. தமிழக போலீஸ் விஜய் கட்டுப்பாட்டுக்கு வரும்போது நீங்கள் அனைவரும் சிறைக்கு செல்வீர்கள்.

எம்ஜிஆருக்கு பின் ஒரு பிரபலமான நடிகராக இருந்து அரசியலுக்கு வர நினைத்தவர் ரஜினிகாந்த். தமிழக அரசியலுக்கு வந்து சிஸ்டத்தை மாற்ற வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இதே திமுக குடும்பம் ரஜினிகாந்துக்கு பல மிரட்டல்களை கொடுத்தது. அவரை அரசியலுக்கு வரவிடாமல் பார்த்துக் கொண்டது. அவர் இன்று என்ன ஆனார், கடைசியில் ரெட் ஜெயண்ட் தயாரிப்பிலேயே நடிக்கச் சென்றுவிட்டார். ரஜினிகாந்த் மீது எந்த விமர்சனமும் கிடையாது. ஆனால் மிரட்டலை சமாளிக்கும் மனவலிமை விஜய்யிடம் இருக்கிறது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.

கரூர் சம்பவத்துக்குப் பின்னரும் நாங்கள் வெளியில் வந்துவிட்டோம். தமிழகத்தில் ஒரு மாற்றம் உருவாக வேண்டும் என விஜய் பயணிக்கிறார். மாற்றம் உருவாக வேண்டும் என நினைத்த தலைவர்கள் தற்போது என்ன ஆனார்கள். மதிமுக தலைவர் வைகோ கட்சி ஆரம்பித்தபோது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து திமுகவை சாடினார். ஆனால் தற்போது நான்கு சீட்டை பெற்று இருக்கிறார். அதில் மூன்று தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் தான் போட்டியிட வேண்டும். ஒரு தொகுதியில் மட்டும் அவர்கள் சின்னத்தில் போட்டியிடுவார்களாம். இது என்ன கூட்டணி என எனக்குப் புரியவில்லை.

2014-ம் ஆண்டு திருமாவளவன் திமுகவை எதிர்த்து கடுமையாக பிரச்சாரம் செய்தார் . தற்போது அவராலும் முடியவில்லை. கமல்ஹாசன் உட்பட அனைவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இறுதியில் அவரும் ரெட் ஜெயண்ட் தயாரிப்பில் நடிக்க சென்றுவிட்டார். அதன் பிறகு மூன்று முறை முதல்வராக இருந்த ஓபிஎஸ், தற்போது திமுகவில் இணைந்துவிட்டார். அப்படியென்றால் திமுகவின் பண பலத்தைப் பாருங்கள். எல்லாரையும் மிரட்டலாம், யாரையும் விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் தமிழகத்தில் விலை கொடுத்து வாங்க முடியாத ஒரே தலைவர் விஜய் தான். இவ்வாறு அவர் பேசினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com